Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 06 ஞாயிற்றுக்கிழமை (21.12.2014) பக்கங்கள் 20 ஓசை – 082

## இலங்கை வீரர்கள் மீது தாக்குதல்; சூத்திரதாரிக்கு மரண தண்டனை

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் மீது பாகிஸ்தானில் வைத்து நடத்தப்பட்ட தாக்குதலின் சூத்திரதாரி என சந்தேகிக்கப்படும் ஒருவருக்கு பாகிஸ்தானில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் பாடசாலை ஒன்றினுள் புகுந்து தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 139 மாணவர்கள் உள்ளிட்ட 149 பேர் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து அந்த நாட்டில் மீண்டும் மரண தண்டனையை அமுலுக்கு கொண்டு வந்தனர். இதன்படி தண்டனை விதிக்கப்பட்டிருந்த வைத்தியர் உஸ்மான் மற்றும் அர்ஷத் மெஹ்மூத் ஆகிய இரு தீவிரவாதிகளுக்கு, வெள்ளிக்கிழமை மரண தண்டணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

தூக்கிலிடப்பட்ட ஒருவரான வைத்தியர் உஸ்மான், இராணுவ மருத்துவப் பிரிவின் முன்னாள் வீரர் என்பதோடு, 2009 இல் ராவல்பிண்டி இராணுவத் தலைமையகம் மீதான தாக்குதலில் ஈடுபட்டார் எனவும் தெரிவிககப்படுகின்றது.

மேலும் இவர் தடைசெய்யப்பட்ட இயக்கமான லஷ்கர்-இ-ஜாங்வியின் உறுப்பினராவார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## இரண்டு புதிய போர்க்கப்பல்களை இலங்கைக்கு விற்கும் இந்தியா

இலங்கைக்கு இரண்டு போர்க கப்பல்களை இந்தியா ஏற்றுமதி செய்யவுள்ளதாக, இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தி அமைச்சர் ராவ் இந்திரஜித் சிங் தெரிவித்துள்ளார்.

இந்தியாவினால், ஏற்றுமதி செய்யப்படும் முதலாவது போர்க கப்பலை, கையளிக்கும் நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட போர்க்கப்பல் ஒன்று முதல் முறையாக மொறிசியசுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

நேற்று இந்த போர்க்கப்பலை கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர். ராவ் இந்தி

(19) ஆம் பக்கம் பார்க்க

## 8 மாத குழந்தையுடன் பெரியம்மா மாயம்

(கிளிநொச்சி)

8 மாத குழந்தையும் குழந்தையின் பெரியம்மாவும் காணாமற்போயுள்ளதாக பெற்றோர் கிளிநொச்சியில் பொலிஸில் முறையிட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது கிளிநொச்சி ஊற்றுப்புலத்தைச் சேர்ந்த செல்வராசா ஜெசிந்தா என்பவர் அவரது சகோதரியுடன் தனது 8 மாதக் குழந்தையான செல்வராசா டினுசியாவின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெறபிரதேச செயலகத்திற்கு கடந்த 16ஆம் திகதி சென்றபோது தனது குழந்தையை சகோதரியிடம் கொடுத்துவிட்டு செயலகத்தினுள் சென்று அலுவல்களை முடித்து திரும்பியபோது வெளியே நின்ற தனது சகோதரியான செல்வராணியும், தனது குழந்தையும் காணாமல் தேடிய நிலையில் இவர்கள் குறித்து கிளிநொச்சி பொலிஸில் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (81)

# நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளுடன் மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனம்



## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனம் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளுடன் உள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது

மைத்திரிபால எமது கட்சியின் பொதுச் செயலாளர் அல்லர். அவருடைய கட்சி உறுப்புரிமையும் நீக்கப்பட்டுள்ளது. அவருக்காக நான் தான் தற்பொழுது கட்சியின் செயலாளர். இவரது தேரதல் விஞ்ஞாபனத்தில் நிரம்பியிருப்பது நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளேயாகும்.

சந்திரிக்கா, ரணில் யுகத்தில் அரச நிறுவனங்கள் பலவற்றை தனியார் மயப்படுத்தினர். அதில் மூன்றை நாம் அரச மயப்படுத்தி இலாபம் அடைந்து வருகின்றோம்.

இவர்கள் பெற்றோல், டீசல் விலையை குறைப்பதாகக் கூறு

(19) ஆம் பக்கம் பார்க்க

## கொழும்புத்துறைமுக நகரத் திட்டம்; சுற்றுச்சூழல் அமைப்புகள் எதிர்ப்பு

சீனாவின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்துக்கு இலங்கையில் அரசியல் மட்டத்தில் மட்டுமன்றி, சுற்றுச்சூழல் அமைப்புகளிடம் இருந்தும் எதிர்ப்பு வலுக்க ஆரம்பித்துள்ளது.

தாம் ஆட்சிக்கு வந்தால், கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை கைவிடுவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ள நிலையில், இந்த திட்டத்துக்கு சுற்றுச்சூழல் அமைப்புகளிடம் இருந்து எதிர்ப்புக்கிளம்பியுள்ளது.

இந்த திட்டத்தினால், இலங்கையின் மென்மையான கடற்சூழல் பாதிக்கப்படும் என்று, சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

பெரும் எண்ணிக்கையான குடியிருப்புகளுடன் செயற்கையான

(19) ஆம் பக்கம் பார்க்க

## காணாமற் போன இளைஞன் கட்டுடையில் சடலமாக மீட்பு

(மானிப்பாய்)

மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலம் எரியுண்டு உருக்குலைந்த நிலையில் நேற்றையதினம் மீட்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் கட்டுடையைச் சேர்ந்த வரதராசா அஜந்தன் (வயது -24) என்பவரது சடலமே உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞரை கடந்த புதன்கிழமைலிருந்து காணவில்லையெனவும், இவரை பல்வேறு இடங்களிலும், பெற்

(19) ஆம் பக்கம் பார்க்க

## வட, கிழக்கிற்கான ரயில்சேவை கடும் மழையால் பாதிப்பு

தலாவ பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால், வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த நகர்சேர் கடுகதி ரயிலை, ஷிராவஸ்திபுர பகுதியில் நிறுத்த நேரிட்டதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை மார்க்கத்தின் கல்லோயா, கந்தளாய் பகுதிகளுக்கு இடையிலான ரயில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் அரசிலிருந்து வெளியேறுகிறதா?

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அரச கூட்டணியிலிருந்து விலகி, பொது எதிரணிகளின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபாலவுக்கு ஆதரவு தெரிவிக்கவேண்டும் என்று கட்சித் தலைமைக்கு அழுத்தம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தவிர ஏனைய மு.கா. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இவ்வாறு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது ஒன்று பட்ட ஒரே கொள்கையுடன் தலைமைக்குக் கட்டுப்பட்டு, தாம் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதற்கு முடிவு செய்துள்ளனர் என்று உறுப்பினர்கள் திட்டவட்டமாக ஹக்கீமிடம் தெரிவித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



# முகமாலைப் பகுதியிலிருந்து அகற்றப்படும் மண் அணைகள்

(பளை)


முகமாலைப் பகுதியிலுள்ள உள்ளக கிராமங்களில் யுத்த காலத்தில் அமைக்கப்பட்ட பாரிய மண் அணைகள் தற்போது அகற்றப்பட்டுவருவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக முகமாலை இத்தாவில் வேம்பொடுகேணி போன்ற கிராமங்களில் அமைக்கப்பட்டிருந்த மண் அணைகள் கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரின் ஏற்பாட்டில் இராணுவத்தினரால் அகற்றப்பட்டு வருகின்றன.

முன்னதாக இக்கிராமங்களில் மண் அணைகள் அகற்றப்படாமல் வெள்ள நீர் தேங்கி குடிமனைகளுக்குள் புகுந்ததால் மக்கள் பல்வேறு அவலங்களை எதிர்நோக்கினர்.

இந்த அவல நிலையை போக்கும் வகையிலே இவ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாவும் இதுவரை முகமாலைப் பகுதியில சுமார் 5 கிலோ மீற்றர் தூரம் வரையான மண் அணைகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (37)

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் அலுவலகங்கள் நேற்று திறப்பு




2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கிளிநொச்சி மாவட்டம் மற்றும் பளை தேர்தல் அலுவலகங்கள நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

நேற்று மாலை கிளிநொச்சிக்கு வருகை தந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரான அமைச்சர் சுசில்பிரேம்ஜயந்த, நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி தலைவருமான முருகேசு சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டு அலுவகங்களை திறந்து வைத்தனர்.

ஏ9 வீதி, பரந்தன் கிளிநொச்சியில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகமும், பச்சிலைப்பள்ளியில் அமைந்துள்ள பிரதேச அலுவலகமும் நேற்று திறந்து வைக்கப்பட்டன.

எதிர்வரும் ஜனவரி மாதம் எட்டாம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவுக்கு ஆதரவாகத் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் இந்த அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன், மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் கட்சியின் ஆதரவாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | SUNDAY |
|---|---|
| Am 05.00-07.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00-08.00 | MORNING SONG |
| Am 08.00-09.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00-10.00 | புதுயுகம் |
| Am 10.00-10.30 | தமிழ் பேசு தமிழா (R) |
| Am 10.30-11.30 | அதிர்வுகள் (R) |
| Am 11.30-12.00 | காதல் கீதங்கள் |
| Am 12.00-12.30 | Hello சிரிக்க சிரிக்க DD |
| PM 12.30-01.00 | ஆரோகணம் |
| PM 01.00-04.00 | சிறப்பு திரைப்படம் |
| PM 04.00-05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00-06.00 | அதிர்வுகள் (R) |
| PM 06.00-07.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00-07.30 | IT.Com |
| PM 07.30-08.00 | மக்கள் முகம் |
| PM 08.00-08.20 | பிரதான செய்தி |
| PM 08.20-08.30 | Song |
| PM 08.30-09.00 | இதய ஊஞ்சல் |
| PM 09.00-11.30 | ஆங்கிலத்திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30-12.00 | நீங்காத நினைவுகள் |


## மணமகள் தேவை

யாழ்.இந்து (மட்டுவில்) கொம்பியூட்டர் எஞ்ஜினியர். (UKPR ஆயிலியம் 5'4" நற்பண்புள்ள மணமகனுக்கு ஓரளவு படித்த (ஆங்கிலம்/கொம்பியூட்டர்/கணக்கு) மணமகள் தேவை.

தொடர்பு-
Vijey40@hotmail.com
021 492 5047
(R/384)

## டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 222 8680, 077 592 5088.
(C/3589)


# மதுபோதையில் இடையூறு நால்வருக்கு பொதுச்சேவை

(கரணவாய்)

நெல்லியடி நகர்ப்பகுதியில் மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த நான்கு பேருக்கு 180 மணித்தியாலயம் பொதுச்சேவை செய்யுமாறு நீதிமன்றம் பணித்துள்ளது.

இவ்வாறு இடையூறு விளைவித்த நபர்களை கைது செய்த நெல்லியடிப் பொலிஸார் இவர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இவ் வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பருத்தித்துறை நீதிபதி குறித்த நால்வருக்கும் 180 மணித்தியாலயம் பொதுச்சேவை செய்யுமாறு உத்தரவிட்டார். (18)

# கஜமுகசுர சங்காரம்

சாவகச்சேரி, கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய (புலுட்டையன் பிள்ளையார்) விநாயகர் விரத கஜமுகசுர சங்காரம் வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமான விநாயகர் விரதத்தில் தினமும் இலட்சார்ச்சனை வெகு சிறப்பாக இடம்பெற்றுவரும் நிலையில் வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு கஜமுகசுர சங்காரம் இடம்பெறவுள்ளது. (இ)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 318 |
| திகதி - | 2014.12.19 |
| வர்ணம் - | நீலம் |

வெற்றி இலக்கங்கள் / ஆங்கில எழுத்து

25 52 60 62 P

பரிசுத் தொகை ரூபா. 19,706,060/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 03 | 150,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 204 | 204,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 369 | 369,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8913 | 534,780/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4613 | 184,520/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 116453 | 2,329,060/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 16878 | 337,560/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 19,706,060/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,108,920/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 19,933,860/-

2014.12.23ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk

(C/3918)



# வழங்கப்பட்ட நிலக்கடலை விதை திறன் அற்றது

## விவசாயிகள் கவலை

முழங்காவில் கமக்கார அமைப்பின் ஊடாக விவசாயிகளுக்கு வாழ்வாதார மேம்பாட்டிற்காக வழங்கப்பட்ட நிலக்கடலை விதைதிறன் அற்றதாகக் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்.ஏ.ஒ. (FAO) நிறுவனத்தின அனுசரணையில் கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்களத்தினால் முழங்காவில் கமக்கார அமைப்பினூடாக வாழ்வாதார மேம்பாட்டிற்காக 500 விவசாயக் குடும்பங்களுக்கு நிலக்கடலை வழங்கப்பட்டது.

இந்நிலையில் நிலக்கடலையை பெற்ற விவசாயிகள் தமது நிலத்தை உழுது பண்படுத்தி விதைப்பை மேற்கொண்ட நிலையில் இந்நிலக்கடலை முளைக்கவில்லை என்வும் இதனால் தாம் நஷ்டமடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (36)



உரும்பிராய் தெற்கு சாட்டு பத்தூர் சபரிபீடம் அருள்மிகு சிவதர்ம சாஸ்தா தேவஸ்தான வருடாந்த தேர் உற்சவம் நேற்று இடம்பெற்றபோது..

# காற்றுடன் கூடிய கடற்கொந்தளிப்பால் வடமராட்சியில் மீன்பிடித்தொழில் பாதிப்பு



(வடமராட்சி)

வடகீழ் பருவப்பெயர்ச்சி காலநிலை காரணமாகவும் வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள குழப்பம் காரணமாகவும் பலத்த காற்றுடன் கூடிய கடற்கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளதால் யாழ். குடாநாட்டின் தொண்டைமானாறு தொடக்கம் பருத்தித்துறை வரையான பாக்கு நீரிணையின் கடற்பகுதியில் மீன்பிடித் தொழில் கடந்த சில நாட்களாக பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

யாழின் வடமராட்சியை அண்டிய பாக்கு நீரிணையில் காற்றின் வேகம் மணிக்கு சுமார் 20 கடல் மைல் வேகத்தில் வீசுவதுடன் கடலில் அலை சுமார் 3 மீற்றர் அளவுக்கு மேல் ஏற்படுவதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது

வழமையாக மீன் பிடித் தொழிலில் ஈடுபடும் நூற்றுக் கணக்கான படகுகள் மற்றும் வள்ளங்களில் கடந்த சில நாட்களில் ஒரு சில படகுகளே கடற்றொழிலில் ஈடுபட்டதைக் காணக் கூடியதாகவிருந்தது. இதனால் கடந்த சில நாட்களாக கடல் உணவுகளின் விலை மிகவும் அதிகரித்துள்ளது.

## மண்டைதீவு - அல்லைப்பிட்டி வீதி பாவிக்கமுடியாத அளவில் வெள்ளம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் புனரமைக்கப்பட்டுள்ள உவர் நீர்த்தடுப்பணையின் மூலமாக கடலில் சேராது தடுக்கப்பட்டுள்ள பெருமளவு மழைநீர் மண்டைதீவில் இருந்து அல்லைப்பிட்டிக்குச் செல்லும் வீதியை மூடி காணப்படுவதன் காரணமாக இந்த வீதியை பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சுமார் இரண்டு அடி வெள்ளம் இந்த வீதியைச் சூழ்ந்துள்ளது. இதன் காரணமாக இவ் வீதியைக்கடந்து சென்று இவ்வீதிக்கருகில் உள்ள சிவன் கோவிலின் வழிபாடுகள் மேற்கொள்வது பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (பா)

## பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளன எல்லைக்குள் பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. பிரதேச எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலுள்ள பார்த்தீனியம் அப் பகுதி இளைஞர் கழகங்களால் ஒழிக்கப்பட்டு வருவதுடன் தனியார் காணிகளில் உள்ள பார்த்தீனியம் சம்பந்தமாக காணி உரிமையாளர்கள் வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் அறிவுறுத்தப்பட்டும் வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக மானிப்பாய் மேற்கு ஜே/140 இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் சண்டிலிப்பாய் மதவடிப் பகுதியில் காணப்பட்ட பார்த்தீனியம் முற்றுமுழுதாக ஒழிக்கப்பட்டது. சுமார் நான்கரைப் பரப்பிற்கும் மேற்பட்ட பகுதியில் காணப்பட்ட பார்த்தீனியம் மானிப்பாய் மேற்கு இளைஞர்கழகத்தின் தன்னார்வப் பணியின் மூலம் ஒழிக்கப்பட்டது.

இப் பார்த்தீனியம் ஒழிக்கப்பட்ட பகுதிக்கண்மையில் அதிகளவான விளைச்சல் நிலங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வில் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் தலைவர் பே.சாம்பவி, செயலாளர் அ.கீர்த்தனா, பொருளாளர் கம்சிகா கணக்குப் பரிசோதகர் கிரிஷாந், அமைப்பாளர் கௌசிகன் உள்ளிட்ட அங்கத்தவர்கள் பலர் கலந்துகொண்டனர் (48)

# வாளொடு மண்ணுக்கு முன்தோன்றி பொய்சொல்லிகளைப் போற்றும் குடி!






பொய்களை ருசித்தவர்கள் அதை ஒருபோதுமே விடமாட்டார்கள்.

பொய்க்கு உண்மையை விட கவர்ச்சிகள் அதிகம்.

பொய் ஒரு மாயை என்பதால் அதற்கு கவர்ச்சியும் அதிகம்.

ஆனால் உண்மை அப்படியானதல்ல.

உண்மை சுடும்.
உண்மை சகித்துக்கொள்ளக் கடினமானது.

அதனால் தான் உண்மையை விட பலரும் பொய்யை விரும்புகிறார்கள்.

தமிழர்கள் பொய் விரும்பிகள்.
பொய்யின் ருசியே அவர்களுடைய மூளையில் இனிப்பாகிறது.

எவ்வளவுதான் இடித்து இடித்து உண்மையைச் சொன்னாலும் அவர்களால் ஒருபோதுமே அதனை ஏற்றுக்கொள்ளவும், சகித்துக்கொள்ளவும் முடியாது.

பொய்யை ருசித்து ருசித்தே பழகியவர்களுக்கு உண்மை என்றால் கசக்கிறது. அச்சத்தை ஏற்படுத்துகிறது.

பொய்யினால் எவ்வளவுதான் அழிவுகளும், ஆய்க்கினைகளும், பின்னடைவுகளும் பெரும் பாதிப்புகளும் ஏற்பட்டாலும் பொய்யிலிருந்து விடுபடுவதற்கு பலருமே விரும்புவதில்லை.
எனவே தான் இவர்கள் பொய்யையும், பொய்சொல்லிகளையும் விரும்புகிறார்கள்.

பொய்யையும், பொய்சொல்லிகளையும் அதிகம் அதிகம் நம்புகிறார்கள்.

இதனால்தான் பொய்யும், பொய்சொல்லிகளும் கோலோச்சுகிற நிலைமை தமிழ் சூழலில் நிலவுகிறது.
இது வெட்கக்கேடானது.
அறிவுக்கு எதிரானது.
உலக வழமைக்கு மாறானது.

ஆனால் தமிழர்கள் இப்படித்தான் வெட்கக்கேடாகவும், அறிவுக்கு எதிராகவும், உலக வழமைக்கு மாறாகவும் உள்ளார்கள்.

அதனால் தான் அவர்களால் வெற்றிக்கனியைப் பறிக்க முடியவில்லை. சிகரங்களைத் தொட முடியவில்லை. தோல்விகளிலிருந்தும், பாதிப்புகளிலிருந்தும் மீள முடியவில்லை.

உண்மையில் தமிழர்களுடைய தோல்விக்கும், பின்னடைவுகளுக்கும் தமிழர்களே காரணம்.
ஆனால் இதைத் தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் பொய் மயக்கத்தில் இருப்பதால் அறிவுக்கண் நிரந்தரமாக மங்கி விட்டது.

உண்மையை உணராதவரை தமிழர்கள் இந்தப் பொய் மயக்கத்தில் இருந்து விடுபடப்போவதில்லை.

ஏனென்றால் பொய் என்பது ஒரு போதையாகும்.

அந்தப் போதைக்கு அடிமைப்பட்டவர்கள், பழகிப்போனவர்கள் அதிலிருந்து ஒருபோதுமே விடுபட மாட்டார்கள்.

இதை விளங்கிக்கொண்ட படியால்தான் தமிழ் அரசியல்வாதிகளில் பலரும் வெற்றிகரமாக பொய்யைச்சொல்லி தங்கள் கொடிகளைப் பறக்கவிடுகிறார்கள். தமிழ் ஊடகங்களும் எந்தத் தயக்கமும் இல்லாமல் மிகப் பெருமிதமாகப் பொய்யைச் சொல்லி பிரபலமாகின்றனர்.

ஆகவே தமிழ்ச் சமூகத்திற்கு பொய் அதிகம் அதிகம் விற்பனையாகும் சரக்காகும்.

பொய்யை விற்போர் மிகப்பெரிய இலாபத்தைச் சம்பாதிக்கிறார்கள்.

பொய்யை உட்கொள்ளும் எந்தச் சமூகமும் உருப்பட்டதாக சரித்திரமே இல்லை.

தமிழர்கள் பொய்யைத் தின்றுகொண்டு எப்படி முன்னேற்றத்தைக் காண்பது?

இதைப்பற்றி தமிழ்ச் சமூத்தின் அறிவு ஜீவிகளும், சமூக அக்கறை உடையோரும் எந்த அளவிற்குச் சிந்திக்கிறார்கள்?

அப்படி எவரேனும் சிந்தித்திருந்தால் பொய்யின் பிடியிலிருந்து தமிழ்ச் சமூகம் எப்போதோ விடுபட்டிருக்கும் அல்லது பொய்க்கு எதிராக அது உண்மையின் குரலை உயர்த்தியிருக்கும்.

ஒரு சமூகத்தை வாழவைக்க வேண்டும் என்றால் அதைப் பொய்யில் இருந்தும் பொருத்தமில்லாத கற்பனையிலிருந்தும் விடுவிக்க வேண்டும்.

அத்தகைய பணியை மனமுவந்து செய்வதற்கு யார் துணிவார்?

அப்படித் துணிந்தவர்கள் துரோகிகள் ஆக்கப்படும் மிகப்பெரிய வரலாறும் தமிழ்ச் சமூகத்தில் தான் உண்டு என்பதையும் நாம் மறக்கக்கூடாது.

தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை உண்மை சொல்லிகளும், உண்மை விரும்பிகளும் துரோகிகளே.

நம்பிக்கை என்பது புயல் காற்றில் துவண்டு விழும் மெல்லிய மலரல்ல அது அடிபெயரா இமயம் போன்றது.

- காந்திஜி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மக்கள் விளங்கிக் கொள்வர்!

மைத்திரிபாலவுக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்று தமிழ் மக்களிடம் வெளிப்படையாகச் சொல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஏன் முடியாமல் இருக்கிறது?

அவர் ஜனாதிபதியாக வந்தாலும், அவரது அந்த ஐந்து வருசத்திற்கும் எதிர்ப்பரசியலைத்தான் ஓட்ட வேண்டியிருக்கும் என்பதை கூட்டமைப்பினர் இப்போதே முடிவு செய்துவிட்டார்கள்.

எனவே இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அடுத்த ஐந்து வருசத்துக்கும் ஆக்கபூர்வமான எந்த முயற்சிகளையும் இவர்கள் மேற்கொள்ளப் போவதில்லை என்பது உறுதியாகிறது.

உண்மையில் இங்கு தீர்வு வரவேண்டுமானால் தமிழ்த் தரப்பிலிருந்து என்ன மாற்றங்கள் காண்பிக்கப்பட வேண்டும், எங்கே போய்ப் பேசவேண்டும், அதற்கு எப்படியான முயற்சிகளைச் செய்யவேண்டும் என்பதையெல்லாம் ஒளித்து, த.தே.கூ. வினர் வெறுப்பையும் எதிர்ப்பையும் விதைத்துக் கொண்டிருந்தாலும் மக்கள் மெல்ல மெல்ல யதார்த்தமுணர்ந்து வருகிறார்கள் என்பது தெரிகிறது.

பகை மறந்து, நல்லிணக்கம் மூலம் இந்த நாட்டின் அனைத்து மக்களும் சம உரிமைகளோடும் சம்மான அபிவிருத்திகளோடும் வாழக்கூடிய தீர்வு ஏற்பட வேண்டும்; அதுதான் சாத்தியமும் கூட என்பதே இன்று அதிகமானவர்களின் புரிதல் என்பதில் சந்தேகமில்லை.

பகையுணர்வை மறத்தலையும் நல்லிணக்கத்தையும் வலியுறுத்தும்போது, இனங்களுக்கிடையில் உணர்ச்சிகரமாகப் பேசி ஆவேச அரசியல் செய்ய முனையும் த.தே.கூ இதை அடிபணிதலாகவோ கீழ்ப்படிவதாகவோ சித்தரிக்க முற்படுகிறார்கள்.

ஏதோ நமது ரோசத்திற்கு இழுக்கு உண்டாவது போல பள்ளத்தில் கிடந்துகொண்டு மேட்டிமைத்தனம் பேசி, சமூகத்தை மேலும் அதலபாதாளத்திற்குத் தள்ளிச் செல்கிறார்கள்.

நல்லிணக்கம் என்பது இங்குள்ள ஒவ்வொரு மனிதரதும் நன்மைக்காக, நமது நன்மைக்காக, நமது மக்களின் வாழ்வுக்காக என்பதைப் புரிந்துகொள்ளாவிட்டால், நாம் தொடர்ந்தும் உணர்ச்சிகர மடையர்களாகவே தேய்ந்து சிதைந்துகொண்டிருப்பது தானே தொடரும்!

இணக்கப்பாட்டு அரசியலின் மூலம் எமது மக்களைக் காப்பாற்றுவதும் வளப்படுத்துவதுமே எங்கள் வழி என்று தெளிவாக அறிவித்துச் செயற்படும் முஸ்லிம் கட்சிகளை நாம் துரோகிகள் என்றும் ஏமாற்றுக்காரர்கள் என்றும் தள்ளிவிட்டு, நாம் பகை அரசியலையே செய்துகொண்டிருப்போம் என்றால்... இன்றைய உலகுக்கு மாற மறுக்கிறோம் என்றுதான் அர்த்தம்.

அரசின் பங்குதாரர்களாக இருந்துகொண்டு மக்களுக்குச் சேவைகளைச் செய்தல், அவர்களது வாழ்வை உயர்த்துதல், அவர்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்ளுதல் என்பதுவே முஸ்லிம் கட்சிகள் அனைத்தினதும் ஏன் மலையகத் தமிழ்க் கட்சிகளதும் பாதையாக இருந்துவருகிறது.

கொஞ்சம் நிதானமாகச் சிந்தித்துப் பார்த்தால், மலையக மக்களின் குடியுரிமை பெற்றதிலிருந்து முஸ்லிம் மக்களின் சகல துறை வளர்ச்சியும் பிரதேச அபிவிருத்திகளும் எந்த அணுகுமுறைக்குக் கிடைத்த பலன்கள் என்பதை விளங்கிக் கொள்வோம்.

இணக்க அரசியல் என்பது மக்களைக் காப்பாற்றும் ஒரு வழிமுறை; மக்களை முன்னேற்றும் ஒரு ராஜரீகச் செயற்பாடு. சர்வதேசமும் இதைத்தான் சொல்லிவருகிறது என்பதை மக்களுக்கு மறைத்தே வெற்று உணர்ச்சிவசனம் பேசிவருகிறார்கள்.

ஒவ்வொரு தேர்தலுக்கும் நம் ஒற்றுமையைக் காட்டிய பிறகுதான் சர்வதேசம் வந்திறங்கப் போகிறது என்று 'பேய்க்காட்டி' வரும் இவர்கள், சர்வதேசம் வந்து என்ன செய்யப்போகிறார்கள் என்பதைச் சொல்லாமல் மறைப்பதிலிருந்தே மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

- ஆசிரியர்

# பாலர் வகுப்பு செயற்பாட்டில் எதிரணியின் வாக்குறுதிகள்

## அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவிப்பு

எதிரணியின் தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் பாலர் வகுப்பின் செயற்பாட்டினை ஒத்ததாகும் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன செனவிரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

நான் ஒரு போதும் கட்சியிலிருந்து விலகப் போவதில்லை. இதற்கு பிறகு அரசிலிருந்து எவரும் கட்சி தாவப் போவதுமில்லை. எதிரணியின் பிரசாரப் பணிகளுக்கு விரைவில் சர்வதேசத்தின் நிதி உதவிகள் கிடைக்கபெறவுள்ளது என்றும் அவர் சாடினார்.

கொழும்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரச ஊழியர்களுக்கு பல சலுகைகளை வழங்கப் போவதாக பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் பத்திரிகை விளம்பரங்களில் குறிப்பிடப்படுகின்றன. எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ள தபால் மூல வாக்களிப்பினை இலக்காகக் கொண்டே இவ்வாறான வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன.

அத்தோடு அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பள உயர்வினை வழங்குவதாக 2010 ஆம் ஆண்டு சரத் பொன்சேகா வழங்கிய வாக்குறுதிகளையே மைத்திரிபால சிறிசேனவும் வழங்கியுள்ளார்.

எனினும் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலின் போது 2,500 ரூபா சம்பள உயர்வினை வழங்குவதாக உறுதியளித்த மஹிந்த ராஜபக்ஷவிற்கே அரச ஊழியர்கள் வாக்குறுதி அளித்தனர்.

எனவே இம்முறையும் அதே நிலைமைதான். எனினும் குறித்த 10,000 ரூபாவில் முற்கொடுப்பனவாக 5,000 ரூபாவை பெப்ரவரி மாதம் வழங்க இருப்பதாக கூறுகின்றனர்.

எவ்வாறாயினும் எமது அரசாங்கம் இம்முறை வரவு செலவுத் திட்டத்தினூடாக 5000 ரூபா கொடுப்பனவுகளை வழங்கியதுடன் அடிப்படை சம்பளத்தை 15000 ரூபாவாக மாற்றியுள்ளது.

அத்தோடு 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலினால் இலங்கையின் மீள் எழுச்சி என்ற கொள்கை பிரகடனத்தில் அரச ஊழியர்களின் தொகையை 3 இலட்சமாக குறைக்கத் திட்டமிட்டனர். மேலும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தவும் முனைந்துள்ளனர்.

எனினும் மஹிந்த ராஜபக்ஷ அரச ஊழியர்களின் தொகையை 14 இலச்சமாக அதிகரித்தார். எனவே எதிரணியினர் சிங்கப்பூர் நாட்டின் கொள்கையை இங்கே அமுல்படுத்த பார்க்கின்றனர். அரச ஊழியர்கள் தொடர்பில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் சிந்தனைகள் ஐ.தே.க. வின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. அரச ஊழியர்களுக்கு அதிகளவில் நிவாரணங்களை வழங்கியது மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கமாகும் என்றார்.

# வேகமாக செல்லும் டிப்பர்சாரதிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை

## யாழ்.போக்குவரத்து பொலிஸ் பெறுப்பதிகாரி எச்சரிக்கை

யாழ். மாவட்டத்திலுள்ள வீதிகளில் டிப்பர் ரக வாகனம் அதிக வேகத்துடன் சென்றால் எதிர்காலத்தில் சாரதிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி சமிந்தசில்வா தெரிவித்தார்.

போக்குவரத்துப்பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் மாதாந்த அமர்வு அண்மையில் இடம்பெற்றது. அதன்போதே போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி இதனைத் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் இடம்பெற்றுவந்த யுத்தம் முடிவடைந்து அபிவிருத்தித் திட்டங்களே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் வீதிகள் புனரமைக்கப்பட்டு 'காப்பெற்' வீதிகளாக மாற்றப்பட்டுள்ளன.

போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் அதிக வேகத்துடன் தங்களது பயணங்களை மேற்கொள்கின்றனர். இதனால் அதிகரித்த விபத்துக்கள் ஏற்படுகின்றது. நாமும் பல்வேறு விழிப்புணர்வுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

எனினும் பயணிப்போர் அவற்றை கடைப்பிடிப்பதாக தெரிவியவில்லை. இவற்றுக்கும் மேலாக இன்று டிப்பர் ரக வாகனத்தின் பாவனை அதிகரித்துள்ளது. அவை அதிக வேகத்துடனேயே செல்கின்றன. இதனால் விபத்துக்கள் அதிகமாக நடைபெறுகின்றன.

அதுமட்டுமல்ல வீதியில் டிப்பர் ரக வாகனங்களை கண்டால் கூட பயணிப்பவர்கள் வீதியின் ஓரமாகச் செல்கின்றதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எனவே சாரதிகள் மிக அவதானமாக செயற்பட வேண்டும். பயணிப்போரின் நலனைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் காலத்தில் அதிக வேகத்தில் செல்லும் ஏனைய வாகனங்கள் மற்றும் டிப்பர் ரக வாகன சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொலிஸார் மீது நடவடிக்கை

சட்டவிரோத தேர்தல் பிரசார சுவரொட்டிகள் மற்றும் பதாதைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காத பொலிஸ நிலையப் பொறுபத்திகாரிகளுக்கு, எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத சுவரொட்டிகள், பெனர்கள் மற்றும் பதாகைகளை அகற்றும் நடவடிக்கை 95 வீதம் வெற்றியளித்துள்ளது.

ஜனாதிபதித்தேர்தல் நிறைவுபெறும் வரையில் இந்த நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப் படவுள்ளது.

# 4000 சிவில் பாதுகாப்பு படையினர் தபால் மூலம் வாக்களிக்க வாய்ப்பு

புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்கப்பட்டு சிவில் பாதுகாப்பு படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட 4 ஆயிரம் பேருக்கு தபால் மூலம் வாக்களிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் இவர்கள் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்திருந்த போதிலும் அதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

இது குறித்து கடந்த 16 ஆம் திகதி கபே அமைப்பு தேர்தல் ஆணையாளரிடம் கடிதம் மூலம் வினவியிருந்தது.

கிளிநொச்சியில் 2 ஆயிரத்து 98 பேருக்கும் முல்லைத்தீவில் 2 ஆயிரத்து 53 பேருக்கும் தபால மூலம் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படை என்ன என கபே அமைப்பு தேர்தல் ஆணையாளரிடம் வினவியிருந்தது.

இந்த சிவில் பாதுகாப்பு படையினரை தேர்தல் பணிகளில் ஈடுபடுத்த பொலிஸார் தீர்மானித்துள்ளதால், அவர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்க இணங்கியதாக தேர்தல் ஆணையாளர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கபே அமைப்பிடம் விளக்கம் கூறியுள்ளார்.

மேற்படி சிவில் பாதுகாப்பு படையினர் தேர்தல் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக தேர்தல் ஆணையாளர் அரசியல் கட்சி தலைவர்களின் கூட்டத்தில் தெரிவித்ததாக கபே அமைப்பு கூறியுள்ளது.

பொலனறுவை, அம்பாறை போன்ற பிரதேசங்களில் சிவில் பாதுகாப்பு படையினருக்கு தபால் மூலம் வாக்களிக்க இதற்கு முன்னர் இவ்வாறான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

இராணுவத்தினர் பராமரித்து வரும் விவசாய பண்ணைகளில் இவர்கள் தொழிலாளிகளாக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் இந்த சிவில் பாதுகாப்பு படையினர் தபால் மூலம் வாக்களிக்கும் போது மேலதிக அதிகாரிகளை கண்காணிப்பில் ஈடுபடுத்துவதாக தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார்.

# மைத்திரிபாலவுக்குப் பின்னால் ஐ.தே.க.வும் ஹெல உறுமயவும்

சங்கர சிவன்

**ஐக்கிய தேசியக் கட்சியும் ஹெல உறுமயவும் ஆட்சி அமைப்பதற்காகத் தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்க வேண்டும் என்று கூட்டமைப்பு ஆலோசனை கூறுகின்றதா?**

**மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினை பற்றியோ அதன் தீர்வு பற்றியோ எதுவும் இல்லை என்பதும் இவர்களுக்குத் தெரியும். மைத்திரிபாலவே இதைப் பகிரங்கமாக ஒத்துக்கொண்டிருக்கின்றார். தமிழ் மக்களின் பிரதான பிரச்சினை பற்றித் தனது விஞ்ஞாபனத்தில் எதுவுமே கூறாத ஒருவருக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களுக்கு ஆலோசனை கூறுவதிலுள்ள சிரமத்தை விளங்கிக் கொண்டதாலேயே கூட்டமைப்புத் தலைமை அதன் முடிவை வெளியிடுவதைத் தள்ளிப் போடுகின்றது.**

ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியாகிய பின்னரே யாரை ஆதரிப்பதென முடிவு செய்யப் படும் என்கிறார் மாவை சேனா திராசா. தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றும் வேலை தொடர்கின்றது என்பதே இதன் அர்த்தம். எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்று கூட்டமைப்புத் தலைவர்கள் ஏற்கனவே முடிவு செய்துவிட்டார்கள். அந்த முடிவு மக்களுக்கு விருப்பமானதாக இருக்காது என்பதால் இன்னும் முடிவு செய்யவில்லை என்று காதில் பூச்சுற்றுகின்றார்கள்.

சம்பந்தன் இந்தியாவுக்குச் செல்வதற்கு முன்னரே பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதாகச் சந்திரிக்காவுக்கு வாக்குறுதி அளித்ததாக ஒரு தகவல் கசிகின்றது. தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து மகிந்தவை வீட்டுக்கு அனுப்புவோம் என்று மாவை சேனாதிராசா அண்மையில் கூறினார். அதைத் தொடர்ந்து, முற்போக்கு சக்திகளுடன் இணைந்து நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்கு வோம் என்றார் சுமந்திரன் பொதுவேட்பாளரை ஆதரிப்பது என்று கூட்டமைப்புத் தலைமை ஏற்கனவே முடிவு செய்துவிட்டது என்பதற்கான ஆதாரங்கள் இவை.

முற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் ஒருபோதும் சொல்வதில்லை. ஏனென்றால் இவர்கள் குறிப்பிடும் முற்போக்கு சக்திகள் இனப்பிரச்சினையின் நியாயமான தீர்வுக்கு ஒருபோதும் ஆதரவளிப்பவர்களல்ல. பௌத்த - சிங்கள சிந்தனையினால் வழி நடத்தப்படுபவர்களும் பேரினவாத அடிப்படையில் சிந்திப்பவர்களுமான ஐக்கிய தேசியக் கட்சியும் ஜாதிக ஹெல உறுமயவுமே இவர்கள் குறிப்பிடும் முற்போக்கு சக்திகள்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதைத் தமிழ் மக்கள் மத்தியில் நியாயப்படுத்தக்கூடிய எந்தக் காரணமும் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு இல்லாததால் இப்போது தங்கள் முடிவை அறிவிக்கத் தயங்குகின்றார்கள். கடைசி நேரத்தில் முடிவை அறிவிப்பதன் மூலம் மக்களிட மிருந்து கேள்விகள் எழுவதைத் தவிர்க்கலாம் என்று நினைக் கின்றார்கள்.

மைத்திரிபால சிறிசேனவின் தேர் தல் விஞ்ஞாபனம் வெளியாகி விட்டதென்று கூட்டமைப்புத் தலை வர்களுக்குத் தெரியும். அந்த விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினை பற்றியோ அதன் தீர்வு பற்றியோ எதுவும் இல்லை என்பதும் இவர்களுக்குத் தெரியும். மைத்திரிபாலவே இதைப் பகிரங்கமாக ஒத்துக் கொண்டிருக்கின்றார். தமிழ் மக்களின் பிரதான பிரச்சினை பற்றித் தனது விஞ்ஞாபனத்தில் எதுவுமே கூறாத ஒருவருக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களுக்கு ஆலோசனை கூறு வதிலுள்ள சிரமத்தை விளங்கிக் கொண்டதாலேயே கூட்டமைப்புத் தலைமை அதன் முடிவை வெளி யிடுவதைத் தள்ளிப் போடுகின்றது.

மைத்திரிபால சிறி சேனவுக்கு அளிக்கும் வாக்குகள் நூறு நாட்களின் பின் ஐக்கிய தேசியக் கட்சியும் ஜாதிக ஹெல உறுமயவும் இணைந்து அரசாங்கம் அமைப்பதற்கு அளிக்கப்படும் வாக்கு களாகவே இருக்கும். ஜனாதிபதியாகப் பதவி யேற்று நூறு நாட்களுக்குள் நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்கிவிட்டு ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிக்கப் போவதாக மைத்திரிபால கூறுகின்றார். தனது தலைமையில் தேசிய அரசாங்கம் அமையும் என்றும் அது இனப்பிரச் சினையைத் தீர்த்து வைக் கும் என்றும் ரணில் சொல்கின்றார். அந்த அர சாங்கம் இனப் பிரச்சினை யைத் தீர்க்குமா என்பது பற்றிப் பின்னர் பார்ப்போம். ஐக்கிய தேசியக் கட்சியும் ஹெல உறுமயவும் ஆட்சி அமைப்பதற்காகத் தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்க வேண்டும் என்று கூட்ட மைப்பு ஆலோசனை கூறு கின்றதா?

பொது எதிரணியும் கூட் டமைப்புத் தலைவர்களும் எதிர்பார்ப்பது போல அவ்வளவு இலகுவில் தேசிய அரசாங்கம் அமையப்போவதில்லை. பல தடை- களைத் தாண்டியாக வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டுவது முதலாவது தடை. இது சாத்தியமில்லை என்பது தென்னிலங்கை அரசியல் நிலைமையைச் சரியாகப் புரிந்து வைத்திருப்பவர்களுக்கு விளங்கும். அடுத்ததாக நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெறவேண்டும். உத்தேச தேசிய அரசாங்கம் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை.

இந்தத் தடைகளையெல்லாம் தாண்டித் தேசிய அர சாங்கம் அமைகின்றது என ஒரு வாதத்துக் காக வைத்துக்கொள் வோம். தேசிய அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பிரதான பங்காளியாகவும் ஜாதிக ஹெல உறுமய இரண்டாவது பெரிய கட்சியாகவும் இருக்கப் போகின்றன. பதின்மூன் றாவது திருத்தத்துக்கு அப்பால் செல்லப் போவதில்லை என்று ரணில் விக்கிரம சிங்க பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார். கரு ஜெயசூரியவும் சஜித் பிரேமதாச வும் பௌத்த - சிங்கள சிந்தனை யினால் வழி நடத்தப்படுபவர்கள். இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்று அடித்துக்கூறும் கட்சி தான் ஜாதிக ஹெல உறு மய. இவர்கள் ஒன்று சேர்ந்து இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வைக் கொண்டு வருவார்களா? இவர்களில் நம்பிக்கை வைத்துத் தமிழ் மக்கள் வாக்களிக்கலாமா?



சர்வதேச சமூகம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் ஒன்பது வருடங்களாகத் தமிழ் மக்களை ஏமாற்றினார்கள். எந்தவித அடிப்படையும் இல்லாமல் தமிழ் மக்களை நம்ப வைத்தார்கள். அதே போல எந்தவித அடிப்படையும் இல்லாமல் தேசிய அரசாங்கம் தீர்வைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையை வளர்ப்பதற்கு முயற்சிக்கின்றார்கள். தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் ஆளுக்கொரு பக்கமாக இருக்கும் தலைவர்கள் தான் உத்தேச தேசிய அரசாங்கத்தில் இருக்கப்போகின்றார்கள். இவர்களால் தேசிய இனப்பிரச்சினைக் குத் தீர்வு காண முடியாது என்பது கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியும். கூட்டமைப்புக்குத் தீர்வில் அக்கறை இல்லை. சர்வதேச சமூகம் பற்றிய நம்பிக்கையை முன்னர் வளர்த்தது போல இப்போது தேசிய அரசாங்கம் பற்றிய நம்பிக்கையை வளர்த்துத் தங்கள் அதிகாரக் கதிரை களைக் காப்பாற்றுவது தான் கூட்டமைப்புத் தலைவர்களின் நோக்கம்.

**முற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் ஒருபோதும் சொல்வதில்லை. ஏனென்றால் இவர்கள் குறிப்பிடும் முற்போக்கு சக்திகள் இனப்பிரச்சினையின் நியாயமான தீர்வுக்கு ஒரு போதும் ஆதரவளிப்பவர்களல்ல. பௌத்த - சிங்கள சிந்தனையினால் வழி நடத்தப்படுபவர்களும் பேரினவாத அடிப்படையில் சிந்திப்பவர்களுமான ஐக்கிய தேசியக் கட்சியும் ஜாதிக ஹெல உறுமயவுமே இவர்கள் குறிப்பிடும் முற்போக்கு சக்திகள்.**

இனப்பிரச்சினையை வளர்த்து அதன் மூலம் அரசியல் பதவிகளை அடையும் கூட்டமைப்பின் சுயநல அரசியலைத் தமிழ் மக்கள் விளங்கிக்கொண்டு சரி யான பாதைக்குத் திரும்ப வேண்டிய காலம் வந்துவிட்டது. அரசியல் தீர்வுக்காக அபிவிருத்தியையோ அபிவிருத்திக்காக அரசியல் தீர்வையோ புறந்தள்ளாமல் செயற்படுவது தான் தமிழ் மக்களின் விமோசனத்துக்கான வழி. பதின்மூன்றாவது திருத்தத்தை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக ஏற்றுப் படிப்படியாக முழுமையான தீர்வை நோக்கி முன்னேறுவோம். அதே நேரம் அபிவிருத்திக்கும் கைகொடுப்போம்.

# மலையக மக்கள் முன்னணித் தலைவி ஜனாதிபதி மகிந்தவுக்கு ஆதரவு



மலையக மக்கள் முன்னணியின் தலைவி சாந்தினி தேவி சந்திரசேகரன் கட்சியின் செயற்குழு முடிவை புறக்கணித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவி சாந்தினி தேவி சந்திரசேகரன் ஏற்பாடு செய் திருந்த ஊடகவியலாளர் சநதிப்பு நேற்று முன்தினம் இரவு தலவாக்கலையில் அவருடைய இல் லத்தில் நடைபெற்றது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்படி கருத்தை அவர் வெளியிட்டுள்ளார். இதன் போது நுவரெலியா பிரதேச சபையின் தலைவர் என்.சதாசிவனும் உடன் இருந் தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

ஜனாதிபதித் தேர்தல் அறிவித்தவுடன் நாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு ஆதரவு தெரிவிப்பதாக அவரை சந்தித்து எமது ஆதரவை தெரிவித்திருந்தோம். அதன்போது சில கோரிக்கைகளையும் அவரிடம் கையளித்தோம்.

அந்த வகையில் எனது நிலைப்பாடு இறுதிவரை அவரை ஆதரிக்க வேண்டும் என்பதே. ஆனால் பின்பு கட்சியில் எதிரணிக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை கொண்டு வந்தார்கள் எனக்கு அதில் உடன்பாடு இல்லை. கட்சியின் உயர் மட்ட குழு கூடி அந்த முடிவை எடுத்தது.எனது கருத்தையும் நான் அவ்வப் போது தெரிவித்தேன்.

ஆனால் கூடுதலானவர்கள் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தில் இருந்தார்கள். அவர்களின் அந்த முடிவிற்கு என்னால் தடைபோட முடியவில்லை. என்றார்.

# வெள்ளத்தில் மூழ்கியது சோமாவதி விகாரை

ஆறுநாட்களாக தொடர்ந்து பெய்த அடைமழையையடுத்து ஏற்பட்ட வெள்ளத்தினால் சோமாவதி விகாரையும் அதனையண்டிய பகுதியும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அத்துடன் பொலன்னறுவை- மன்னம்பிட்டிய வீதியும் வெள்ளத்தில். மூழ்கியுள்ளது.

கவுடுல்லே மற்றும் பராக்கிரம சமுத்திரங்களின் வான் கதவுகள் மூன்று அடிக்கு திறந்துவிடப்பட்டுள்ளன.

சோமாவதி விகாரைக்கு சென்ற யாத்திரிகர்களில் 750 பேர், சோமாவதிக்குள் சிக்கிக்கொண்டுள்ளனர்.

அவர்களை உடனடியாக மீட்கும் பணிகளில் படையினர் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த பிரதேசங்களில் சுமார் 7500 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கையும் இந்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் முறைப்பாடுகள் 280

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதை அடுத்து இதுவரை 280 முறைப்பாடுகள் கிடைககப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இவற்றில் 29 பாரிய சம்பவங்களுடன் தொடர்புடைய முறைப்பாடுகளாகும், 251 சிறிய முறைப்பாடுகளாகும்.

மேலும் கண்டியில் 9 பாரிய சம்பவங்களுடன் தொடர்புடைய முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் கூறியுள்ளது.

# மலையக மக்கள் முன்னணி தலைவி மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் தலைவி சாந்தினிதேவிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கட்சியின் செயலாளர் ஏ.லோரன்ஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கட்சியின் செயலாளர் நாயகம் ஏ.லோரன்ஸ் கருத்து தெரிவிக்கையில்,

இதுவரையில் கட்சியின் நடவடிக்கைகள் எவற்றுக்கும் தலைவி சாந்தினிதேவி சந்திரசேகரன் எந்தவித ஒத்துழைப்பையும் வழங்கவில்லை. தலைவியின் இந்த தீர்மானம் கட்சியின் செயற்குழுவுக்கு எதிரான ஒரு தீர்மானமாகும். எனவே அதற்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கைகளை எடுக்க தீர்மானிததுள்ளோம். என்றார்.

ஆனால் மலையக மக்கள் முன்னணயின் பெரும்பான்மையான மத்திய குழு உறுப்பினர்களும் கவுன்சில் உறுப்பினர்களும் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிலைப் பாட்டில் இருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இன்று கட்சியின் முக்கிய கூட்டம் ஒன்று ஹட்டன் நகரில் நடைபெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது. இதன்போது பல முக்கிய தீர்மானங்கள் மேற் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# 26 இலங்கையர்களை நாடு கடத்தியது ஜப்பான்

26 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை ஜப்பான நாடு கடத்தியுள்ளது. புகலிடம் கோரி விண்ணப்பித்திருந்த இந்த இலங்கையர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட காரணத்தினால் இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இந்த அனைத்து புகலிடக் கோரிக்கையாளர்களினதும் விண்ணப்பங்கள் இரண்டு தடவைகள் பரிசீலனை செய்யப்பட்டு இரண்டு தடவைகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக ஜப்பான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இலங்கைப் புகலிடக்கோரிக்கையாளர்களுடன் மேலும் ஆறு வியடம்நாம் புகலிடக் கோரிக்கையாளர்களும் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

ஜப்பானின் விசேட விமானம் மூலம் இவர்கள் இலங்கைக்கு கடந்த வியாழக்கிழமை நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் 26 வயதுக்கும் 60 வயதுக்கும் உட்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் பின்னர் ஜப்பானினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய நாடு கடத்தல் நடவடிக்கை இதுவாகும்.

இந்த நிலையில் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டமைக்கு மனித உரிமை ஆர்வலர்களும், சட்டத்தரணிகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். ஜப்பானிய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது மனிதாபிமானமற்ற செயற்பாடு என குற்றம் சுமத்தியுள்ளனர்.

நாடு கடத்தப்பட்டவர்கள் ஆபத்துக்களை எதிர்நோக்கக் கூடும் என மனித உரிமை ஆர்வலர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

பொதுவாக புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட புகலிடக் கோரிகையாளர்கள் மேன் முறையீடு செய்து புகலிடக் கோரிக்கை விண்ணப்பங்களை மீளவும் சமர்ப்பிக்க கால அவகாசம் வழங்கப்படுகின்ற போதிலும், இவர்களுக்கு அவ்வாறு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ளனர்.

# குறுகிய அரசியல் நோக்குடைய பொய்ப் பிரசாரங்களை நம்பவேண்டாம்

## தேர்தல் பரப்புரையில் ஜனாதிபதி தெரிவிப்பு



பொய்ப் பிரசாரங்களை நம்ப வேண் டாம் - குறுகிய அரசியல் நோக்கம் ஒரு நாளும் வேண் டாம் நாம் எங்களுடைய காலத்தில் செய்த அபிவிருத்திகள் போன்று வேறு ஒரு காலத்திலும் யாரும் செய்ததில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு விஜயம் செய்த ஜனாதிபதி நேற்றுமுன் தினம் மாலை வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்து உரை யாற்றிய அவர்,

கடந்தகால யுகத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியும். பல விதமான கஸ்டங்களுடன் இருநதீர்கள். அது மாத்திரமல்ல சுனாமியினால் கஸ்டபட்டீர்கள்.

அதேபோன்று கடந்த இருள் சூழ்ந்த யுகத்தினால் கஸ்ரப்பட்டீர்கள். ஆனால் எமது அரசினுடைய அபிவிருத்திகள் ஊடாக பல விதமான நன்மைகளைப் பெற்றுத்தர எம்மால் முடியும் என்று முதலில் கூறி வைக்கின்றேன்.

நாங்கள் எவ்வளவோ மணித்தியாலங்களை கடந்து வர வேண்டிய தூரங்களையெல்லாம் குறுகிய காலத்துக்குள் வந்து சேரக்கூடிய வாய்ப்புக்களையும் வசதிகளையும் உங்களுக்குப் பெற்றுத் தந்திருக்கிறோம்.

அது மாத்திரமல்ல பாதைகள், பாலங்கள், குடிநீர் வசதிகள் என அத்தியாவசிய வசதிகளைப் பெற்றுத் தந்திருக்கிறோம். இனிவரும் காலத்தில் எலலா வீட்டிற்கும் குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம்.

இந்த மாகாணத்தில் பல விதமான அபிவிருத்திகளை செய்திருக்கிறோம் முக்கியமாக சுற்றுலாத்துறை அபி விருத்தி, விமான நிலைய அபிவிருத்திகள் மூலம் பெருமளவான வேலை வாய்ப்புக்களை உருவாக்கியிருக்கிறோம் என்றார்.

# 3,65,167 வாக்காளர்கள் மட்டக்களப்பில் தகுதி

எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருபபு ஆகிய 3 தேர்தல் தொகுதிகளிலும் 365, 167பேர் தகுதிபெற்றுள்ளனர் என்று அம்மாவட்ட உதவித் தேர்தல்கள ஆணையாளர் ஏ.எம்.எம்.கபீர் தெரிவித்துள்ளார்.

இதன்படி கல்குடா தொகுதியில் 1,05 055 பேரும் மட்டக்களப்பில் 1,72497 பேரும், பட்டிருப்பில் 87 611 பேரும் தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன் 4 இடம் பெயர்ந்த வாக்காளர்களும் தகுதி பெற்றுள்ளனர். தபால் மூலம் வாக்களிக்க விண்ணப் பித்த 10988 பேரில் 8815 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நடைபெறும் தபால் மூல வாக்களிப்புக்கென 171 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட செலயக உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 26ஆம் திகதியும் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

8 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்காக 414 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

இதில் கல்குடாவில் 115 வாக்களிப்பு நிலையங்களும், மட்டக்களப்பு தொகுதியில் 119 நிலையங்களும் பட்டிருப்பு தொகுதியில் 100 நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

தபால் மூல வாக்குகளை எண்ணுவதற்காக 5 நிலையங்களும் ஏனைய வாக்குகள் எண்ணும் பணிகளுக்காக 28 நிலையங்களுமாக மொத்தம் 33 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த தேர்தல் கடமைகளில் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர்கள், வாக்கெண்ணும் நிலைய உத்தியோகத்தர்கள் என 3980 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப் படவுள்ளனர் என்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.





யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 'இண்டரக்ட்' கழகங்களிற்கான பதவிப்பிரமாண நிகழ்வு அண்மையில் யாழ்.செல்வமகால் மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போது பிரதம விருந்தினர் மங்கல விளக்கேற்றுவதையும், பதவிப்பிரமாணத்தின் போது சின்னம் சூட்டப்படுவதையும், கலைநிகழ்வு இடம்பெறுவதையும் காணலாம். (48)

# சனசமூக நிலையமுன்பள்ளிக்கு தளபாடங்கள் வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீதுர்க்கா சனசமூக நிலைய முன்பள்ளி சிறுவர் பாடசாலைக்கான தளபாடங்கள் புளொட் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாணசபை உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தனால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. தர்மலிங்கம் சித்தார்த்தனின் வடமாகாணசபை நிதியிலிருந்து 30000 ரூபாய் பெறுமதியுடைய தளபாடங்களே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

ஸ்ரீதுர்க்கா சனசமூக நிலையத்தின் தலைவர் ரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கெங்கா உள்ளிட்ட சனசமூக நிலைய நிர்வாகத்தினரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

இந்நிகழ்வின் போது நலன் விரும்பிகள் சிலரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கற்றல் உபகரணங்களும் இக்கிராமத்தைச் சேர்ந்த பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன. கெங்காவின் ஏற்பாட்டில் இதற்கான நிதி சேகரிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் விடுமுறை நிறைவடைந்து மீண்டும் பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்பதாக, இப்பிள்ளைகளுக்குத் தேவையான மேலும் பல உபகரணங்களையும் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் மாணவர்களும் பெற்றோர்களும் நலன விரும்பிகளும் கலந்து கொண்டனர். (63)

# சபை அமர்வில் இடைவிலகும் உறுப்பினர்கள் குறித்து கவலை


(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபை அமர்வின் போது இடைநடுவே நழுவிச் செல்லும் உறுப்பினர்கள் தொடாபில் அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் கவலை வெளியிட்டார்.

கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற இரண்டாம் நாள் குழு நிலை விவாதத்தின் போதே அவர் இந்த கவலையை வெளியிட்டுள்ளார்.

நான் இங்கிருந்து செல்லமுடியாது, ஆனால் நீங்கள் மட்டும் பேசிவிட்டு நைசாக இங்கிருந்து செல்கிறீர்கள் எனவே 3 நிமிடத்திற்கு மேல் பேசாதீங்கள் பேசவும் விடமாட்டேன் என கடுமையாகத் தெரிவித்தார். கடந்த அமர்வில் இறுதிவரை உறுப்பினர்கள் இருக்காது தமது உரை நிறைவடையும் போது எல்லாம் நைசாக அவைக்கு வணக்கம் தெரிவித்து அங்கிருந்து நழுவிச் சென்றனர்.

முதலமைச்சர் கூட அவையின் செயற்பாடு முடியும் முன்னரேயே சென்று விட்டார். ஒரு சில உறுப்பினர்கள் இறுதிவரை இருந்து அவையை முடித்துச் செல்கின்றனர் அமர்வின் போது கூட அவைத்தலைவர் இதை நாசூக்காக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)



# முல்லை மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் கூட்டம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புனர் வாழ்வு மற்றும் சிறைச்சாலை அமைச்சர் சந்திரஸ்ரீ கஜதீரவின் ஏற்பாட்டில் ஜனாதிபதித் தேர்தல் கூட்டம் இடம் பெற்றுள்ளது.

முள்ளியவ்ளை தண்ணீருற்று சந்தியில் முன்னாள் போராளிகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து இப் பொதுக்கூட்டம் இடம் பெற்றுள்ளது. இதில் பெருந்திரளான மக்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.(40)

# இளைஞர்கழக சம்மேளனத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம்

(மானிப்பாய்)

வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் மாதாந்த பொதுக்கூட்டமும் மறைந்த தேசிய இளைஞர் கழக சம்மேளன செயலாளர் சமன் குமார ரண்வீரவிற்கான அஞ்சலி நிகழ்வும் இன்று இடம்பெறவுள்ளது.

இக் கூட்டமும் அஞ்சலி நிகழ்வும் பிற்பகல் 1 மணி முதல் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் ச.செந்தில்குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

புதிய கழகங்களின் நிர்வாக சபையினருடனான கலந்துரையாடல், மறைந்த தேசிய இளைஞர் கழக சம்மேளன செயலாளர் சமன் குமார ரண்வீரவிற்கான அஞ்சலி நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

அஞ்சலி உரைகள் சம்மேளனத்தின் பொருளாளர் அ.ஜெபநேசன், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன் உள்ளிட்டவர்கள் வழங்குவார்கள்.

முன்னதாக மறைந்த தேசிய இளைஞர் கழக சம்மேளன செயலாளர் சமன் குமார ரண்வீரவின் உருவப்படத்திற்கு மலரஞ்சலியும், சுடரஞ்சலியும் இடம்பெறவுள்ளதாக வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் தெரிவித்தனர்.

எனவே இவ் பொதுக் கூட்டத்திற்கும் அஞ்சலி நிகழ்விற்கும் அனைத்து இளைஞர் கழகங்களின் பிரதிநிதிகளையும் தவறாது சமூகம் தருமாறு வலி தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (48)

## வெற்றி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் இவ்வருடம் நடாத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்கான மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றிய மாணவர்களில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 09.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் வகையில் அவர்களுக்கு பதககங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படவிருப்பதால் மேற்படி மாணவர்களை அன்றைய தினம் தவறாது உரிய நேரத்திற்கு கலந்து கொள்வதற்கு ஆவன செய்து கொடுக்குமாறு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.(03)

## முரசின் இன்றைய பலன்

20.12.2014 (ஞாயிற்றுக்கிழமை)

ஜய வருஷம் மார்கழி மாதம் 06 ஆம் திகதி.
சதுர்த்தி/மரணயோகம்/கரிநாள்
கேட்டை நட்சத்திரம் மு.இ. 09.34 வரை. பின் மூலம்.
இராகு காலம 04.58 - 06.28 வரை. சுபநேரம 09.28 - 10.58 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்:** இயந்திரமயமான வாழ்க்கையில் சலிப்படைந்து வெளிநாட்டை கைவிட்டு தாயகம் வருதல்.

**ரிஷபம்:** பாதுகாப்பில் அலட்சியம் இருப்பதைக்கைவிடாதிருத்தல்.

**மிதுனம்:** சகோதரர்களுடன் ஏற்பட்ட பிணக்கு நீங்கி சுமுக உறவு தக்கவைத்தல்.

**கடகம்:** நிலுவைகள் பெற தூர இடங்களுக்கு தொலைபேசியைப் பயன்படுத்தல்.

**சிம்மம்:** நிலுவை கூடியதால் மின்சார பாவனை துண்டித்தல்.

**கன்னி:** விசாரணையின் முடிவில் விவாகத்தைக்கைவிட உத்தேசம்.

**துலாம்:** நீண்டநாள் உறவு கொடுக்கல் வாங்கலினால் பாதிக்கப்படல்.

**விருச்சிகம்:** சுபகாரியம் நடாத்துவதற்கு பணம்பெற நண்பரை நாடல்.

**தனுசு:** ஏழரைச்சனி ஆரம்பித்ததால் புதிய முயற்சியினை ஒத்திவைத்தல்.

**மகரம்:** வருமானத்தின் பெரும்பகுதி மனையாளின் நோய் குணமாககரைதல்.

**கும்பம்:** விபத்துப்பற்றி எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.

**மீனம்:** குடியுரிமை பெறும் செய்தி அறிந்து மகிழ்தல்.

# பிறிஸ்பேனில் ஆஸி அசத்தல் வெற்றி



(பிறிஸ்பேன்)

இந்தியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி நான்கு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியா-அவுஸ்ரேலியா அணிகள் மோதிய 2ஆவது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்றது.

முதலில் நாணய சுழற்சியில் வென்று முதலில் ஆடிய இந்திய அணி முதல் இனிங்ஸில் 408 ஓட்டங்கள் குவித்தது. அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸில் 505 ஓட்டங்களைப் பெற்றது. இந்நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி நேற்று முன்தினம் 3ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 1 விக்கெட் இழப்புக்கு 71 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் நேற்று நான்காம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது. தவான் 26 ஓட்டங்களுடனும், புஜாரா 15 ஓட்டங்களுடனும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். காயம் காரணமாக தவான் களம் இறங்கவில்லை. புஜாராவுடன், வீராட் ஹோலி இணைந்து ஆடினார். அவுஸ்ரேலிய வீரர்களின் அபாரமான பந்து வீச்சால் இந்திய விக்கெட்டுகள் மளமள என்று சரிந்தன.

117 ஓட்டங்கள் எடுப்பதற்குள் இந்திய அணி 6 விக்கெட்டுக்களை இழந்தது. இதில் ஹோலி (1), ரஹானே (10), ரோகித் சர்மா (0) ஆகியோர் விக்கெட்டை ஜோன்சன் கைப்பற்றினார். தொடர்ந்து ஹாசில்வுட் பந்தில் அணித்தலைவர் டோனியும் (0), ஸ்ரார்க் பந்தில் அஸ்வினும் (19) ஆட்டம் இழந்தனர்.

காயம் காரணமாக தவான் 6ஆவது விக்கெட் வீழ்ந்த பின் களம் வந்தார். பொறுப்புடன் விளையாடி வந்த புஜாரா 7ஆவது விக்கெட்டாக ஆட்டம் இழந்தார். அவர் 43 ஓட்டங்கள் எடுத்தார். அப்போது இந்திய அணி 143 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தொடர்ந்து தவான் தனி நபராக கடுமையாக போராடினார். 81 ஓட்டங்களில், அவரும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். இறுதியில் இந்திய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக 64.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றது. இதனால் அவுஸ்ரேலியாவுக்கு 128 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. கடைசியாக உமேஷ் யாதவ் 30 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். ஜோன்சன் நான்கு, ஹாசில்வுட், ஸ்ரார்க், லயன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதையடுத்து 128 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்கை நோக்கி அவுஸ்ரேலியா 2ஆவது இனிங்ஸை தொடங்கியது.வோர்னரும், ரோஜர்சும் ஆரம்ப வீரர்களாக களம் இறங்கினார்கள். வோர்னர் 6 ஓட்டங்களிலும், அவரைத் தொடர்ந்து களமிறங்கிய வட்சன் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமலும் விரைவில் விக்கெட்டை இழந்தனர்.

பொறுப்புடன் ஆடிய ரோஜர்ஸ் அரைச்சதம் கடந்து அணியின் வெற்றிக்கான அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்.

அவர் 55 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இந்த மூன்று விக்கெட்டுகளையும் இசாந்த் சர்மா கைப்பற்றினார்.

இதையடுத்து அணித்தலைவர் ஸ்மித்துடன் இணைந்து ஆடிக் கொண்டிருந்த மார்ஷ் 17 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், யாதவிடம் விக்கெட்டை இழந்தார். ஆரோன் வீசிய நோபோலை தட்டிவிட்டு ஓட்டங்கள் எடுக்க முயன்ற ஸ்மித் துரதிர்ஷ்டவசமாக ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்த ஓவரில் ஹடினை (1) வெளியேற்றினார் யாதவ். அதன் பின்னர் 24ஆவது ஓவரில் மார்ஷ் பவுண்டரி அடித்து வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக ஆறு விக்கெட்டுக்களை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்று நான்கு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக ஸ்மித் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வெற்றியின் மூலம் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அவுஸ்ரேலியா 2-0 என முன்னிலை பெற்றுள்ளது.

விளையாட்டுச் செய்திகள்

## பெரிய கும்பிடு



அவுஸ்ரேலிய அணி கப்டன் ஸ்ரீபன் ஸ்மித், ஜோன்சன் இணை இந்திய அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் 7ஆவது விக்கெட்டுக்கு 148 ஓட்டங்கள் சேர்த்தனர். ஒருவழியாக தனது வேகத்தில் அவுட்டாகிய ஜோன்சனைப் பார்த்து, பெரிய கும்பிடு போட்டு வழியனுப்பி வைத்தார் இசாந்த் சர்மா.

## பறிபோகுமா பதவி



(லண்டன்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணி சமீபத்தில் இலங்கை அணிக்கு எதிரான ஒரு நாள் தொடரை 2-5 என்ற கணக்கில் இழந்தது.

இதன் காரணமாக கப்டன் பதவியில் இருந்து அலிஸ்டர் குக்கை நீக்க வேண்டும் என்று முன்னாள் வீரர்கள் போர்க்கொடி தூக்கினார்கள்.

இதன் காரணமாக இங்கிலாந்து கப்டன் பதவியில் இருந்து குக் நீக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. நேற்று முன்தினம் நடந்த இங்கிலாந்து தேர்வு குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக லண்டனில் இருந்து வெளியாகும் ஆங்கில பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

ஆனால் இந்தத் தகவல் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இங்கிலாந்து அணியின் புதிய கப்டனாக மோர்கன் நியமிக்கப்படவுள்ளார் என்றும் அந்த தகவல் கூறுகிறது. அவுஸ்ரேலியாவில் நடைபெறும் 3 நாடுகள் போட்டி மற்றும் உலக கோப்பை போட்டியிலும் அவர் கப்டனாக இருப்பார்.

குக்கின் ஆட்டம் மிகவும் மோசமாக இருந்து வந்தது. தொடக்க வீரரான அவர் கடந்த 22 ஆட்டத்தில் ஒரே ஒரு அரைச் சதமே அடித்து இருந்தார். இதனால் உலக கோப்பை அணியில் இருந்து கழற்றிவிடப்படுகிறார்.

15 பேர் கொண்ட அணியில் அவர் இடத்திற்கு கேரி பேலன்ஸ் இடம்பெறுகிறார். ஹால்ஸ், மொய்ன் அலி புதிய தொடக்க வீரர்களாக ஆடுவார்கள்.

## அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறினார் சாய்னா



(டுபாய்)

உலகின் 8 முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள உலக சூப்பர் சீரிஸ் பட்மின்டன் தொடர் டுபாயில் நடந்து வருகிறது. இதில் 'ஏ" பிரிவில் இடம் வகித்த இந்திய வீராங்கனை சாய்னா நேவால் நேற்று முன்தினம் தனது கடைசி லீக்கில் தென் கொரிய வீராங்கனை பாவ் யோன் ஜூவை எதிர் கொண்டார்.

69 நிமிடம் நீடித்த இந்த ஆட்டத்தில் முதல் செட்டை 15-21 என்ற கணக்கில் இழந்த சாய்னா பின்னர் சுதாகரித்து ஆடி அடுத்த 2 செட்களையும் 21-7, 21-17 என்ற கணக்கில் தனதாக்கி வெற்றி பெற்றார்.

இந்தப் போட்டித் தொடரில் தொடர்ந்து 3ஆவது வெற்றியை பதிவு செய்த சாய்னா தனது பிரிவில் முதலிடம் பிடித்து அரையிறுதிக்கு முன்னேறினார்.

ஆண்கள் பிரிவில் (பி பிரிவு) இந்திய வீரர் ஸ்ரீகாந்த் தனது கடைசி லீக்கில் 21-17, 12-21, 14-21 என்ற செட் கணக்கில் டென்மார்க்கின் ஜான் ஜோர்ஜென்சனிடம் தோல்வியை தழுவினார்.

இப்பிரிவில் மூன்று பேர் தலா 2 வெற்றி, ஒரு தோல்வியுடன் சமநிலை வகித்த நிலையில், செட் விகிதாச்சார அடிப்படையில் ஜோர்ஜென்சனும், ஸ்ரீகாந்தும் அரையிறுதியை உறுதி செய்தனர்.

## நியூசிலாந்தில் சாதிக்க முயல்வோம்

(ஹமில்டன்)

நியூசிலாந்து அணிக்கெதிரான கிரிக்கெட் தொடர் சவால் வாய்ந்தது. இருப்பினும் நாங்கள் இத்தொடரில் சாதிக்க முயல்வோம் என இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நியூசிலாந்தின் கிரிஸ்சேர்ச்சில் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடர் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மத்தியூஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெற இன்னும் ஏழு முதல் எட்டு வாரங்களே உள்ளன. இந்நிலையில் நியூசிலாந்துடனான டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடர்கள் எங்களுக்குச் சிறந்த பயிற்சிக் களமாக அமையும். இங்கிலாந்து அணியுடன் நடைபெற்ற ஒரு நாள் தொடரில் அனைத்து வீரர்களும் சிறப்பாகச் செயற்பட்டு அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர்.

அதேபோன்று நியூசிலாந்துடனான கிரிக்கெட் தொடரில் சிறப்பாகச் செயற்படுவார்கள் என நம்புகின்றேன். டில்சான், சங்கக்கார போன்ற வீரர்கள் சிறந்த ஆட்டத்திறனுடன் இருப்பது அணிக்கு வலுச்சேர்க்கும். இருப்பினும் நியூசிலாந்து அணியை நாங்கள் குறைத்து மதிப்பிடவில்லை. அதன் சொந்த மண்ணில் நியூசிலாந்து சிறப்பாக செயற்படும் என நம்புகிறேன் என்றார்.

## தெற்காசிய விளையாட்டுப் போட்டி இந்தியாவின் கவுகாத்தியில்

கவுகாத்தியில் தெற்காசிய விளையாட்டுப் போட்டி நடாத்தப்படும் என இந்திய ஒலிம்பிக் சங்கம் அறிவித்துள்ளது. இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் (ஐ.ஒ.ஏ) செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் சென்னையில் நேற்று முன்தினம் நடந்தது. இந்தக் கூட்டம் முடிந்தபிறகு இந்திய ஒலிம்பிக் சங்க தலைவர் என்.ராமச்சந்திரன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

குத்துச்சண்டை இந்தியா அமைப்புக்கு அங்கீகாரம் அளிப்பது குறித்து ஐ.ஒ.ஏ செயற்குழுவில் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. ஏற்கனவே இந்திய அமெச்சூர் குத்துச்சண்டை கூட்டமைப்புக்கு ஐ.ஒ.ஏ அங்கீகாரம் அளித்து உள்ளது என்பதால் குத்துச்சண்டை இந்தியா அமைப்பை அங்கீகரிக்க முடியாது என்று ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டது.

சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனத்தால் அங்கீகரிக்கப்பட்ட குத்துச்சண்டை இந்தியா அமைப்பு விதிமுறைகளுக்கு மாறாக தேர்தலை நடாத்தியுள்ளது. இதனால் எங்களால் அந்த அமைப்பை அங்கீகரிக்க முடியாது. ஆசிய, கொமன்வெல்த் மற்றும் ஆசிபீச் விளையாட்டு போட்டிகளில் தங்கம், வெள்ளி, வெண்கல பதக்கம் வென்றவர்களுக்கு முறையே ரூ.3 லட்சம், ரூ.2 லட்சம், ரூ.1 லட்சம் ரொக்கப்பரிசு வழங்கப்படும். தெற்காசிய விளையாட்டுப் போட்டி அடுத்த ஆண்டு நவம்பர்-டிசம்பர் மாதங்களில் வடகிழக்கு மாநிலமான கவுகாத்தியில் நடைபெறவுள்ளது. தேசிய விளையாட்டுப் போட்டி அடுத்த மாதம் கேரளாவில் திட்டமிட்டப்படி நடைபெறும். அதைத் தொடர்ந்து அடுத்த தேசிய விளையாட்டு போட்டிகள் கோவா, சத்தீஷ்கர், உத்தரகாண்டில் நடைபெறும் என்றார்.

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவிகள் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தல்

(கரணவாய்)

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சமூக சேவைகள் திணைக்களத்தினூடாக வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு உதவிகளை மக்களுக்கு வழங்கி வருகிறது.

அந்த வகையில் கரவெட்டி சமூகசேவைகள் பிரிவுக்கு இந்த வருடத்தில் பல்வேறுபட்ட உதவிகள் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள், மாற்று வலுவுடையோர், நோயாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் பல உதவிகள் வழங்கப்பட்டும் வருகிறது. அதுடன் அடுத்த வருடத்தில் இவ் உதவிகளைப் பெறுவதற்கு குறிப்பிட்டோர் விண்ணப்பிக்க முடியும் என கரவெட்டி பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.


இதன்படி திணைக்களத்தால் Unicef நிதி உதவித் திட்டத்தின் கீழ் மாதாந்த சிகிச்சைக்குச் செல்ல கஷ்டப்படுபவர்களுக்கு மாதாந்தம் 1500 ரூபா வீதம் 13 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களுக்கு வீடு திருத்தம் செய்ய நான்கு பேருக்கு 90 ஆயிரம் ரூபா வீதம வழங்கப்பட்டது. இக்கொடுப்பனவைப் பெறக் கோரிக்கைக் கடிதம், மருத்துவ அத்தாட்சிப் பத்திரம், காணி உறுதிப்பத்திரம் என்பவற்றுடன் சமூக சேவைகள் பகுதியில் நேரடியாக விண்ணப்பிக்கலாம். இக் கொடுப்பனவு புதிதாக வீடு அமைப்பவர்களுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் திருத்தத்திற்கு உச்ச தொகையாக 150,000 ரூபா வீதம் வழங்கப்படுகின்றது.

அங்கவீனமுற்ற பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் மற்றும் பாடசாலைக்கு ஆட்டோவில் செல்லும் மாணவர்களுக்கு போக்குவரத்து செலவாகவும் ஐந்து மாணவர்களுக்கு கொடுப்பனவு தொகை வழங்கப்பட்டுள்ளது. இக்கொடுப்பனவைப் பெற கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்ட கோரிக்கைக் கடிதம், மருத்துவ அத்தாட்சிப் பத்திரம் என்பவற்றுடன் சமூக சேவைகள் பகுதியில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் சமூக சேவைகள் பகுதியில் சமர்ப்பிக்க வேண்டும்.

அங்கவீனமுற்ற நபர்களுக்கு முச்சக்கரவண்டி, சக்கர நாற்காலி, மூக்குக் கண்ணாடி, செயற்கைக் கால், காது கேட்கும் கருவி என்பன வழங்கப்பட்டன. இவ் உபகரணங்களைப் பெற கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்ட கோரிக்கைக் கடிதம், மருத்துவ அத்தாட்சிப்பத்திரம் என்பவற்றுடன் சமூக சேவைகள் பகுதிக்கு சமுகமளிக்க வேண்டும். 2014இல் வழங்கப்பட்ட உ பகரணங் களாக 21 பேருக்கு கண்வில்லை, 5 பேருக்கு முச்சக்கர வண்டி, இருவருக்கு காது கேட்கும் கருவி, 8 பேருக்கு மூக்குக் கண்ணாடி, 7 பேருக்கு செயற்கைக்கால், 5 பேருக்கு சக்கர நாற்காலி என்பன வழங்கப்பட்டுள்ளன. (18)

## தொடரும் கன மழை அணைக் கதவுகள் திறப்பு



(வடமராட்சி)

யாழ். குடாநாட்டில் தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக தொண்டைமானாறு ஏரியில் தேங்கிய நீர்மட்டம், அதன் அருகில் அமைந்துள்ள தொண்டைமானாறு - அச்சுவேலி வீதியை மூடுமளவிற்கு மற்றும் குடியிருப்புக்களை முட்டுமளவிற்கும் வெள்ள நீர் நிரம்பியுள்ளது.

இதனால் சுமார் 4 மீற்றர் வரை நிரம்பியிருந்த தொண்டைமானாறு ஏரி, அணையின் கதவுகள் சில திறக்கப்பட்டிருந்தன

அணையில் (Sluice gate) பொருத்தப்பட்டுள்ள நீர் மட்டத்தை அளக்கும் நீர்மானியின் (Draft gauge) அளவுகளின் படி நீர் மட்டம் சுமார் 4 மீற்றர் வரை உயர்ந்திருந்தது. இதனால் அணையின் கதவுகள் சில திறந்து விடப்பட்டன.

## இலக்கிய மன்றத்தின் வருடாந்த கலை விழா

வல்வெட்டித்துறை கலை கலாசார இலக்கிய மன்றத்தின் இலக்கிய பெருவிழாவிற்கான ஏற்பாடுகள் தற்பொழுது நடைபெற்றுவருகின்றன. கலைவிழா வழமைபோல் எதிர்வரும் புதுவருட தினமான 1 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதுவரை வல்வெட்டித்துறை நெடியகாட்டு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய முன்றலில் இடம்பெற்று வந்த விழா, இந்த முறை வல்வை அம்மன், சிவன் கோவில்களின் பொது வீதியில் இடம்பெறவுள்ளது.

நெடியகாட்டு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவிலில் குறித்த தினத்தன்று வீதி உலா இடம்பெறவுள்ளது.

வல்வெட்டித்துறை கலை கலாசார இலக்கிய மன்றத்தினால் பொதுமக்களிடமிருந்து திரட்டப்படும் நிதியினைக் கொண்டு கடந்த 4 வருடங்களாக தொடர்ந்து சிறப்பாக இலக்கிய விழா நடாத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# வாழ்வாதார உதவியை பெற்ற ஊடகவியலாளர் பணி நீக்கம்

(கிளிநொச்சி)

அரசின் வாழ்வாதார உதவித திட்டத்திலிருந்து மடிக் கணனி ஒன்றை பெற்றுக்கொண்டமைக்காக கிளிநொச்சி பிராந்திய அலுவலகச் செய்தியாளரை• யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவருகின்ற பத்திரிகை ஒன்று பணியில் இருந்து நிறுத்தி உள்ளது..

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது மீள்குடியேற்றத்தின் பின்பு கிளிநொச்சி மாவட்டத்தில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவித்திட்டங்களில் ஊடகவியலாளர்கள் உள்ளடக்கப்படவில்லை, மிகவும் குறைந்த வருமானத்துடன் நெருக்கடிமிக்க தொழிலில் ஈடுப்பட்டு வரும் ஊடகவியலாளர்களின் நலன்கள் மற்றும் தொழில் மேம்பாடு கருதி வாழ்வாதார உதவிகளை வழங்குமாறு கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர்கள் சங்கம் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரிடம் கோரிக்கைவிடுத்திருந்தது.

இதற்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு வாழ்வாதார உதவியாக தொழில் கருவிகள் பெற்றுக கொடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த வகையில் முதற்கட்டமாக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் பணியாற்றும் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த பத்து ஊடகவியலாளர்கள் கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் முன்மொழிவுகளுக்கு அமைவாக மடிக்கணனி, புகைப்படக் கருவி, வீடியோ கருவி என்பன வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு கடந்த 10-12-2014 அன்று கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான முருகேசு சந்திரகுமார், பிரதேச செயலாளர் கோ. நாகேஸ்வரன்,பிரதேச செயலக உதவித்திட்டப்பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டு வழங்கி வைத்தனர்.

இதன் போது யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவருகின்ற தினசரி பத்திரிகை ஒன்றின் கிளிநொச்சி அலுவலக செய்தியாளர் ஒருவரும் மடிக்கணனி ஒன்றை பெற்றிருந்தார். இதனையடுத்து குறித்த பத்திரிகையின் ஆசிரியர் செய்தியாளாருடன் தொடர்பு கொண்டு எங்கள் பத்திரிகையின் கொள்கை மற்றும் சட்ட திட்டங்களுக்கு அமைவாக ஊடகச் சங்கங்களில் இருப்பதோ,ஊடகவியலாளர்களுக்கான வாழ்வாதார உதவிகளை பெற்றுக் கொள்வதோ கூடாது எனவே பெறறுக்கொண்ட மடிக் கணனியைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள் அல்லது பணியில் இருந்து நீக்கப் படுவீர்கள் என தெரிவித்திருந்தார். மடிக்கணனியைத் திருப்பிக் கொடுக்க மறுத்த ஊடகவியலாளர் தனது பதவியிலிருந்து தான் விலக்கப்படுவதற்கு முன் பத்திரிகை ஆசிரியரிடம் விலகல் கடிதத்தை வழங்கிவிட்டு பணியிலிருந்து விலகியுள்ளார்.

ஊடக சுதந்திரம்,ஊடகவியலாளர்களின் சுதந்திரம், பற்றியெலலாம் அளவுக்கு அதிகமாக பேசிக் கொள்ளும் பத்திரிகை, ஊடகவியலாளர்களுக்கு அரசு ஏவ்வித உதவித்திட்டங்களையும் வழங்கவில்லை என அடிக்கடி எழுதி வரும் பத்திரிகை,மாதாந்தம் குறைந்த ஊதியத்தில் பணியாற்றிவரும் தனது அலுவலகச் செய்தியாளர் ஒருவர் அரசின் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் மடிக்கணனி ஒன்றை பெற்றுக்கொண்டமைக்காக பணியிலிருந்து நீக்கியமை அனைவர் மத்தியிலும் கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை குறித்த பத்திரிகை அண்மையில் பல இலட்சத்திற்காக தனது முகப்பு பக்கத்தில் ஜனாதிபதியின் தேர்தல் விளம்பரத்தை பிரசுரித்துள்ளமையும் மற்றும் அரசின் விளம்பரங்கள் மூலம் அதிக வருமானத்தை பெற்றுவருகின்றமையும் பலரால் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (29)


## யாழ். பல்கலைக்கழகத்தில் தேசிய ஆராய்ச்சி மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தினால் முதல் தடவையாக எற்பாடு செய்யப்பட்ட பௌதீக,மனிதவள, பொருளாதார,வணிகம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளின் தேசிய ஆராய்ச்சி மாநாடு கடந்த வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

ஆராய்ச்சி மாநாட்டின் தலைவரும் பேராசிரியருமாகிய ஜீ.மிகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரும் பேராசிரியருமாகிய வசந்தி அரசரட்ணம்,அமெரிக்க தேசிய பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி நிபுணர் பேராசிரியர் கரிம் எம்.மரிரா கலந்து கொண்டு இந்த மாநாட்டின் ஆராய்ச்சி செயற்றிட்டங்களை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த ஆராய்ச்சி மாநாட்டின் நோக்கமானது பல்கலைக்கழக மாணவர்கள்கற்றுவரும் துறைகளை மேலும் வலுச்சேர்க்கும் வகையிலும், அவர்களின் ஆக்கத்திறன்களையும் முன்னேற்று வதற்கும் இந்த மாநாடு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாக மாநாட்டில் கலந்து கொண்ட ஆராய்ச்சி துறைகளின் பேராசிரியர்கள் தெரிவித்தனர். மேலும் குறித்த நிகழ்வில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (48)



காவேரி கலாமன்றத்தினரின் தயாரிப்பில் வண.கலாநிதி ரீ. எஸ். யோசுவாவின் எழுத்துருவிலும் நெறியாள்கையிலும் வெளியாகிய சத்திய ஜனனம் கிறிஸ்து பிறப்பு நாட்டுக் கூத்து கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் அண்மையில் மேடையேற்றப்பட்டது. (90)

## ஆளுநரின் மூத்த பிரஜைகள் கழகம் கோப்பாயில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

ஆளுநரின் மூத்த பிரஜைகள் கழகம் கோப்பாயில் கடந்த புதன்கிழமை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நீர்வேலி திருமுருகன் மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். மூத்த பிரஜைகளின் அறிவு, அனுபவம் என்பனவற்றினை இளைய சமூகத்துடன் பகிர்ந்து கொள்வதே இக்கழகத்தின் பிரதான நோக்கமாகும்.

அத்துடன் தல யாத்திரை மேற்கொள்ளல், அடிப்படை கணனி அறிவினை பெற்றுக் கொள்ளல் என்பனவும் இக்கழகத்தினூடாக மேற்கொள்ளப்படவுள்ளன. அங்கத்தவர்களின் கோரிக்கைக்கு அமைவாக, உள்ளக விளையாட்டு உபகரணங்கள் கரம்போட், சதுரங்கம், டாம் என்பன ஆளுநரினால் வழங்கப்பட்டது.

கலாநிதி ஆறு.திருமுருகன், பிரம குமாரிகள் நிலைய சகோதரிகள், கோப்பாய் பிரதேச உதவிச் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய ஆணையாளர் அலுவலக உதவிச் செயலாளர் திருமதி என்.சிறிதேவி, யாழ் மாவட்ட பிராந்திய ஆணையாளர் அலுவலக உதவிச் செயலாளர் எஸ்.அண்ணாத்துரை மற்றும் உயர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டார்கள்.

# தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்பதை அவர்களே தீர்மானிக்கட்டும்



கடந்த தேர்தல்களில் குறிப்பாக இரண்டு ஜனாதிபதித் தேர்தலில் நடந்தவற்றை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத் தேர்தலில் தலையிடாது ஒதுங்கி இருந்துகொண்டு தமிழ் மக்களை அவர்களின் இஷ்டப்படி செயற்பட்டு யாருக்கு வாக்களிப்பது என்ற முடிவை எடுக்க அவர்களை விட்டுவிட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்துகிறது.

கடந்த இரு ஜனாதிபதி தேர்தல்களில் நடந்த தவறுகளின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு ஆலோசனை வழங்கும் தகுதியைகூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இழந்துவிட்டனர். இதன் காரணமாகவோ என்னவோ அவர்கள் இப்போது மாகாணசபை, பிரதேச சபை உறுப்பினர்களுடன் பேசுகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இரண்டொருநபரே இறுதி முடிவை எடுப்பார்கள் என்றும் ஏனையவர்கள் வெறும் ஆமாம் போடுபவர்களே என்பதையும் அனைவரும் அறிவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சுயநலமும் பதவி ஆசையும் பெருமளவு ஆட்கொண்டுள்ளமையால் மக்களை வழிநடத்தும் தகுதியையும் அவர்கள் இழந்துவிட்டனர். அத் தலைவர்களில் அநேகர் தமது நிகழ்ச்சி நிரலின்படியே செயற்படுவதோடு தமது எதிர்காலம் பற்றிய கனவுடனேயும் தமது கட்சிகளின் எதிர்காலம் பற்றிய நினைவுகளுடனேயே …நக்கின்றனர்.

தமிழ் மக்கள் மத்தியில புத்திஜீவிகளுக்கும், அனுபவசாலிகளுக்கும் பஞ்சமில்லை. மக்களுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கவும் திறமையான தலைமையை தகுதியுள்ள பலர் ஏற்க தயாராக உள்ளனர். தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இரண்டு மூன்று நபர்களை தவிர ஏனையோர் வெறும் ஆமாம் போடுபவர்களாகவே உள்ளனர்.

முக்கிய முடிவுகளை அந்த இரண்டு மூன்றுபேர் மாத்திரமே எடுக்கின்றனர். உள்நாட்டு வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இவர்களுடைய முடிவுகளை ஒழுங்காக பத்திரிகைகளில் எழுதுவதோடு அம்முடிவுகளை திரும்பதிரும்ப மிகைப்படுத்தி வருகின்றனர்.

**- வீ. ஆனந்தசங்கரி அறிக்கையிலிருந்து.**

ஜனாதிபதித் தேர்தலில் தலையிடாது தமிழ் மக்களை தாமாக தாம் விரும்புவருக்கு வாக்களிக்கக்கூடிய வகையில் அவர்களை செயற்படவிட்டு ஒதுங்கியிருக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கேட்பதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு போதிய நியாயமான காரணங்கள் உண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியை நீக்கிவிட்டு அந்த அணியில் தம்மை இணைத்துக்கொண்டது. இதை தமது சொந்த இலாபத்துக்காகவும் ஓர் அரசியல் கட்சியாக தம்மை தக்கவைத்துக் கொள்வதற்குமாகவே அப்படி செய்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக புலிகள் சார்ந்த புலம் பெயர்ந்தவர்களின் ஆதரவை பெறவே அவ்வாறு செய்தனர். இதன் உள்நோக்கம் பற்றி அனைவரும் அறிந்ததே.

நாம் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளையும் ஒவ்வொரு தமிழ் மகனும் மிக கவனமாக பரிசீலித்து வேட்பாளர்கள் தத்தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் முன் வைத்துள்ள விடயங்களை நன்கு ஆராய்ந்து யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்ற நல்ல முடிவினை எடுக்கவேண்டும். கடந்த இரு ஜனாதிபதி தேர்தல்களில் விட்ட தவறை மீண்டும் விடாமல் பகிஸ்கரிக்கும் எண்ணத்தை கைவிட்டு தமிழர்கள் தான் ஜனாதிபதியை தெரிவுசெய்வார்கள் என்ற இறுமாப்பு எண்ணத்தையும் கைவிடுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்துகிறது.

# சினிமா சினிமா

● ஏ.எல்.விஜய் இயக்கத்தில் விக்ரம்பிரபு நடிக்கும் இது என்ன மாயம்? படத்தின் விளம்பரம் வந்தது. அந்த விளம்பரத்தில் விக்ரம்பிரபு ஒரு மஜிக் நிபுணர் போல உடையணிந்திருந்தார். அவ்வளவுதான். சில ஆண்டுகளுக்கு முன்பு வந்திருந்த சிறந்த மஜிக் நிபுணர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களைப் பயன்படுத்திப் பெரும்பொருள் சம்பாதிக்கும் ஆங்கிலப்படத்தின் கதைதான் இது என்று உடனேயே பேச்சு கிளம்பிவிட்டது. ஒருபடம் இன்னும் தொடங்கக்கூட இல்லை, ஒரேயொரு விளம்பர வடிவமைப்பை வைத்துக் கொண்டு தீர்மானத்துக்கு வருவது ஆரோக்கியமல்லதான். அதேசமயம் இதுபோன்ற பேச்சுகள் கிளம்புவதற்குக் காரணம் சம்பந்தப்பட்டவர்களின் முந்தைய செயல்பாடுகள்தாம் என்பதால் இதைச் சந்தித்தே ஆகவேண்டிய கட்டாயத்தில் அவர்கள் இருக்கிறார்கள்.

● பெரும்பாலான சினிமா நடிகர் - நடிகைகள், தங்களுடைய நல்ல பழக்க, வழக்கங்களை மட்டும் தான் வெளியே சொல்வர். தங்களுக்கு இருக்கும் குடிப்பழக்கம் போன்ற பழக்கங்களை வெளியே சொல்வதில்லை. ஆனால், பொலிவுட் நடிகை அலியா பட், “நான் மது அருந்துவேன்...” என்று துணிச்சலாக கூறியுள்ளார். “குபி ஹோ சக்தா ஹே” என்ற, “டிவி” நிகழ்ச்சியை முன்னாள் இந்தி நடிகர் அனுபம் கேர், தொகுத்து வழங்கி வருகிறார். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அலியா பட், “நான் மது அருந்துவேன்; இரவு விருந்துகளில் கலந்து கொள்வது மிகவும் சந்தோஷம் அளிக்கிறது. 16வயதிலேயே தந்தையிடம் பொய் சொல்லி, பார்ட்டிக்கு போயிருக்கிறேன்...” என்று கூறியுள்ளார்.

● ராணாவுடன் காதல் முறிந்த நிலையில், “காவியத்தலைவன்” படத் தயாரிப்பாளர் வருண் மணியனுடன் த்ரிஷா நிச்சயதார்த்தம் செய்து கொண்ட படங்கள் சமீபத்தில் வெளியாகின. வருண் மணியன் த்ரிஷாவுக்கு அணிவித்த நிச்சயதார்த்த மோதிரமும் அந்த புகைப்படங்களில் இருந்தது. இதை உறுதிப்படுத்தும் விதமாக தனுஷ் நடிக்கும் படம், ஜெய் நடிக்கும் “புகழ்” ஆகிய படங்களிலிருந்து த்ரிஷா நீக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் வருண் மணியன் பெயரைக் குறிப்பிட்டு முதல் முறையாக டுவிட்டரில் தனது கருத்தை எழுதியிருக்கிறார் த்ரிஷா. “காவியத்தலைவன்” அனைவரும் பார்க்க வேண்டிய படம். இந்த படத்தை வழங்கியதற்காக வருண் மணியனுக்கு நன்றி” என குறிப்பிட்டிருக்கிறார். படத்தின் இயக்குநர் வசந்தபாலனை குறிப்பிடாமல் வருண் மணியனை பாராட்டி இருப்பது த்ரிஷா - வருண் இடையேயான உறவை காட்டுகிறது என்கிறது கோலிவுட் வட்டாரம்.

● தனுஷ் நடித்துள்ள அனேகன் பட இசைவெளியீட்டு விழாவில் இயக்குநர் கே.வி. ஆனந்த பேசிய பேச்சால் அந்தப்படத்தின் கதாநாயகியான ஹிந்தி நடிகை அமைரா கோபமடைந்துள்ளார். விழாவில் கே.வி.ஆனந்த் பேசும் போது நடிகையின் வால்தனங்களைக் கூறி, “லூசு” என்று குறிப்பிட்டார். மொழி தெரியாததால் அனைவரும் கைதட்டியபோது, தானும் சேர்ந்து கைதட்டிய நடிகைக்கு, விழா முடிந்த பின் தான் அவர் என்ன சொன்னார் என்பதே தெரிய வந்திருக்கிறது. இதனால் கடுப்பான நடிகை, விழா முடிந்த பின் நடந்த விருந்தில் கலந்து கொள்ளாமலேயே மும்பைக்கு பறந்து விட்டார்.



அதையடுத்து, பலமுறை போனில், மன்னிப்பு கேட்டும் நடிகையின் கோபம் தணியவில்லை.

● விஜய் நடித்த, கத்தி படத்தின் தெலுங்கு ரீ-மேக்கில் மகேஷ்பாபுவை நடிக்க வைக்கும் முயற்சி நடந்தது. ஆனால், அதற்கு அவர் மறுத்து விட்டார். காரணம், “கத்தி படத்தில் விஜய் சிறப்பாக நடித்திருந்த அளவுக்கு என்னால் நடிக்க முடியுமா என்று தெரியவில்லை. அதனால் தான் மறுக்கிறேன்...” என்று கூறியுள்ள மகேஷ்பாபு, “நேரடி படங்களில் நடிப்பதை விட, ரீ - மேக் படங்களில் நடிப்பது கடினம்...” என்றும் கூறியுள்ளார்.

● நயன்தாரா ஆர்யாவை விட்டு முற்றிலுமாக விலகி விட்டதாக சினிமா வட்டாரங்கள் தகவல் தந்தபோதிலும், “அதெல்லாம் வெறும் நாடகம் அவர்கள் எப்போதும் போல் இப்போதும் நட்பு வளர்த்துக்கொண்டு தான் இருக்கின்றனர்...” என்ற செய்தியும் கசிந்துள்ளது. ரீ-என்ட்ரிக்கு பின், ஆர்யாவின் வீட்டில் வசித்து வந்த நடிகை, இப்போது ஆர்யாவின் இன்னொரு ரகசிய வீட்டில் குடியேறியிருப்பதாகவும் கூறப்படுகிறது. தங்களைப் பற்றிய, “கிசுகிசு”க்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், அதை நிறுத்தவே இருவரும் இந்த நாடகத்தை அரங்கேற்றியிருப்பதாகவும் சொல்கின்றனர்.

● வேட்டை படத்துக்குப் பின் தமிழில் நடித்து வரும், இறுதிச்சுற்று படத்தில், முதன்முறையாக தாடி கெட்டப்பில் நடித்துக் கொண்டிருக்கிறார் மாதவன்.



● விசாரணை என்ற படத்தை இயக்கி வரும் வெற்றிமாறன், அடுத்து தனுஷ் நடிப்பில், குரங்காட்டி என்ற படத்தை இயக்குகிறார்.

● தெலுங்கு சினிமாவில் நயன்தாராவுக்கு, ஓராண்டுக்கு நடிக்க தடைவிதித்து, அங்குள்ள தயாரிப்பாளர் சங்கம் “ரெட்” கார்ட் போட்டிருக்கிறது.


● வடிவேலு கதாநாயகனாக நடித்து வந்த, எலி படத்திற்கு நிதிப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதால், மீண்டும் காமெடியனாக மூன்று படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார்.

● முன்னணி நடிகையாக இருந்தாலும், யாராவது புதியவர்கள் படம் எடுப்பதாக தெரிந்தால், எந்தவித ஈகோவும் பார்க்காமல், அவர்களை தேடிச் சென்று பட வேட்டை நடத்துகிறார் அஞ்சலி.

● கல்லூரிப் படிப்பை முடித்து விட்ட ஷாலினியின் தங்கை ஷாம்லியும், விரைவில் கதாநாயகியாக நடிக்க வருகிறார்.

● வெங்கட் பிரபு இயக்கி வரும், மாஸ் படம், ஒரு ஹொலிவுட் படத்தின் தழுவல் என்று கோலிவுட்டில் செய்தி பரவியுள்ளது.

எதிர்காலத்தில் செவ்வாய்க்கு விண்வெளி வீரர்களை அனுப்புவதற்குப் பயன்படுத்தப்படக்கூடிய விண்கலம் ஒன்றை அமெரிக்கா உருவாக்கியுள்ளது. இப்போது சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அமெரிக்கா உட்பட பல நாடுகளையும் சேர்ந்த



# தேசிய அரசியலில் புறமொதுக்கப்பட்ட கூட்டமைப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கப்போகும் நிலைப்பாடு, என்பது தொடர்பான கேள்விகள்

அமெரிக்கா உட்பட பல நாடுகளையும் சேர்ந்த விண்வெளி வீரர்கள் ரஷ்யாவின் சோயுஸ் விண்கலம் மூலம் தான் சென்று வருகிறார்கள். இப்பின்னணியில் தான் அமெரிக்காவின் ஓரியன் (Orion) என்னும் புதிய விண்கலம் உருவாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கேப் கெனவரல் விண்வெளி நிலையத்திலிருந்து கடந்த 5 ஆம் திகதி உயரே செலுத்தப்பட்ட ஓரியன் பூமியை இருமுறை சுற்றி விட்டு சுமார் நாலரை மணி நேரத்துக்குப் பிறகு பசிபிக்



# அமெரிக்காவின் புதிய விண்கலம்!

கடலில் திட்டமிட்டபடி வந்திறங்கியது. இந்த முதல் கட்ட சோதனையில் அது வெற்றி பெற்றுள்ளது.

ஓரியன் பூமியிலிருந்து 5800 கிலோ மீற்றர் உயரம் வரை சென்றது. (இதுடன் ஒப்பிட்டால் சர்வதேச விண்வெளி நிலையம் சுமார் 430 கிலோமீற்றர் உயரத்தில்தான் பறக்கிறது). ஓரியன் அவ்வளவு உயரம் சென்று விட்டு பூமிக்குத் திரும்புகையில் மணிக்கு 32 ஆயிரம் கிலோ மீற்றர் வேகத்தில் கீழ் நோக்கி இறங்கியது.

அது காற்று மண்டலத்தில் நுழைந்த போது ஓரியன் விண்கலத்தின் வெளிப்புறம் 2200 பாகை செல்சியஸ் அளவுக்குச் சூடேறி நெருப்புப் பிழம்பாக மாறியது. விண்கலத்தின் வெளிப்புறத்தில் வெப்பத் தடுப்பு பாதுகாப்பு ஏற்பாடு இருந்ததால் விண்கலத்துக்குப் பாதிப்பு ஏற்படவில்லை. கடைசியில் அது பாராசூட்கள் உதவியுடன் கடலில் வந்து விழுந்தது.

ஓரியன் விண்ணில் செலுத்தப்படுவது இதுவே முதல் தடவை என்பதால் இதில் யாரும் ஏறிச் செல்லவில்லை. வெறும் கருவிகள் மட்டுமே இதில் இடம் பெற்றிருந்தன. அடுத்து இப்புதிய விண்கலம் 2017 ஆம் ஆண்டில் இதே போல ஆளில்லாமல் செலுத்தப்பட்டு சந்திரனை சுற்றி விட்டு பூமிக்குத் திரும்பும். 2021 ஆம் ஆண்டளவில் தான் அமெரிக்க விண்வெளி வீரர்கள் இந்த விண்கலம் மூலம் உயரே செல்வர்.

ஓரியனை செலுத்துவதற்கென்றே புதிதாக சக்திமிக்க ரொக்கெற் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. அது தயாராவதற்கு நான்கு ஆண்டுகள் ஆகும். ஆதலால் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அமெரிக்க வீரர்கள் செல்வதற்கு அமெரிக்கா இன்னும் பல ஆண்டுகளுக்கு ரஷ்ய விண்கலத்தைத் தான் நம்பி நின்றாக வேண்டும்.

அமெரிக்காவுடன் ஒப்பிட்டால் ரஷ்யா 1967 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சோயுஸ் (Soyuz) விண்கலம் மிக நீண்ட காலமாக செயல்பட்டு வருகிறது. செலவு குறைவு என்பதுடன் மிக நம்பகமானது என சோயுஸ் விண்கலம் கடந்த சுமார் 50 ஆண்டுகளில் நிரூபித்துள்ளது. ஆனால் சோயுஸ் விண்கலத்தின் மூலம் சந்திரனுக்கோ செவ்வாய்க்கோ செல்ல இயலாது.

செவ்வாய்க்கு மனிதனை அனுப்ப இப்போது உறுதியான திட்டம் எதுவும் இல்லை. செவ்வாய்க்குச் செல்வதற்கு ஆகக்கூடிய செலவை தனி ஒரு நாட்டினால் சுமக்க முடியாது. பல நாடுகளும் ஒன்று சேர்ந்தால் தான் அது சாத்தியம் என்ற நிலைமை உள்ளது. செவ்வாயைத் தவிர விண்வெளி வீரர்களை அனுப்புவது என ஒரு கட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டால் ஓரியன் விண்கலம் தான் கைகொடுக்கும்.

# துக்ளக் கேள்வி பதில்களில்...

**கேள்வி:** இலங்கையில் தமிழர் பகுதிக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கும் கூட்டாட்சி திட்டத்தை, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனா நிராகரித்துள்ளாரே?

**பதில்:** மகிந்த ராஜபக்ஷ மீது அதிருப்தியில் உள்ள இலங்கைத் தமிழ் வாக்காளர்கள், எதிர்க் கட்சிகளின் இந்த பொது வேட்பாளரை எப்படி ஆதரிக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. அவரோ "கூடுதல் அதிகாரம் கிடையாது" என்று தனது நிலைமையைத் தெளிவுபடுத்தி விட்டார். இனி அங்குள்ள தமிழர் அமைப்புகள் என்ன முடிவெடுக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும்.

**கேள்வி:** இலங்கை அதிபர் தேர்தலில் யார் வெற்றி பெறுவது இந்தியாவிற்கும், தமிழகத்திற்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் நல்லது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

**பதில்:** எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனா, மகிந்த ராஜபக்ஷ போல அல்லாமல், சமஷ்டி அமைப்பு ஏற்பட வழி செய்ய முன்வருவார் - என்ற எதிர்பார்ப்பு சிலரிடம் இருந்தது. ஆனால் அவரோ, அப்படி எண்ணம் இல்லை என்பதை தெளிவாக்கி விட்டார். இது தவிர, அவர் எது செய்ய நினைத்தாலும், தன்னை ஆதரிக்கும் பல கட்சிகளின் ஒப்புதல் இல்லாமல் எதையும் செய்ய முடியாது. தமிழர்கள் விஷயத்தில் அந்த மாதிரி ஒப்புதல், பல கட்சிகளிடம் இருந்து கலபமாகப் பெறக் கூடியது அல்ல. ராஜபக்ஷ நிலை இப்படிப்பட்டது அல்ல. ஆகையால் அவரிடம் காரியம் சாதித்துக் கொள்ள முயற்சிப்பதே மேல். அந்த வகையில் பார்த்தால் அவர் வெற்றி பெறுவது இந்தியாவிற்கு ஓரளவுக்காவது நல்லதாக இருக்கக் கூடும்.

– கே. சஞ்சயன் கட்டுரையிலிருந்து.

என்பது தொடர்பான கேள்விகள் இன்னமும் இருந்துவருகின்றன.

ஆரம்பத்தில் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டபோது, "இன்னமும் தேர்தல் அறிவிக்கப்படவில்லை. அறிவிப்பு வெளியான பின்னர் யோசிக்கலாம்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிவந்தது. தேர்தல் அறிவிப்பு வெளியான பின்னர், இரு தரப்பினரின் தேர்தல் அறிக்கைகளும் வெளியாகட்டும். அதன் பின்னர் முடிவை அறிவிப்போம் என்று கூறியுள்ளது கூட்டமைப்பு.

இப்போது வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்டு, பிரசாரங்கள் சூடுபிடித்துள்ளன.

எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் அறிக்கை இன்று(19-12-2014) வெளியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், அவரது தேர்தல் அறிக்கையில், தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற எதுவுமே இடம்பெறப்போவதில்லை என்பது ஏலவே உறுதியாகியுள்ளது.

தமது தேர்தல் அறிக்கையில், 100 நாள் செயற்றிட்டத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுமென்றும் ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் நடத்தப்படும் நாடாளுமன்றத் தேர்தல் மூலம் தெரிவாகும் புதிய அரசாங்கமே, இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் கவனம் செலுத்துமென்றும் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

அதேவேளை, அரச தரப்பு வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கை சாதகமாக இருந்தால் கூட, அவருக்கு ஆதரவளிக்கும் முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் எடுக்கமுடியாது. ஏனென்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை அரசாங்கம் வேண்டாமென்று நிராகரித்துவிட்டது. அதனுடன் பேச்சு நடத்தக்கூட முயற்சிக்கவில்லை.

அப்படியான நிலையில், ஆளும் கட்சியின் தேர்தல் அறிக்கை சாதகமான விடயங்களை கொண்டிருந்தாலும் கூட, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் எடுக்கமுடியாது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கை பற்றி அலட்டிக் கொள்ளாத நிலையில், பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் அறிக்கையில் ஒன்றுமே இருக்கப்போவதில்லையென்று



வெளிப்படையாக தமது நிலையை அறிவிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயங்கினாலும், இந்தத் தேர்தலில் என்ன செய்யப்போகிறது. தமிழ் மக்களை எப்படி வாக்களிக்குமாறு கோரப்போகிறதென்பது தொடர்பில் ஏற்கனவே முடிவு எடுத்துவிட்டதென்றே தெரிகிறது. அந்த முடிவு, கட்டாயம் வாக்களிக்க வேண்டுமென்று தமிழ் மக்களை வலியுறுத்துவதாக இருக்குமென்றும் ஆனால், யாருக்கு வாக்களிப்பது என்பதை சிந்தித்து முடிவு எடுக்கவேண்டுமெனக் கோருவதாகவும் இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

காரணம் என்னவென்றால், தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ள ஒரே தெரிவாக எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பது மட்டுமே உள்ளது. ஆனால், அவர் மூலமாக தமிழ் மக்களுக்கு ஏதாவது கிடைக்குமென்று சிறு உத்தரவாதத்தைக்கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வழங்கமுடியாதுள்ளது.

தான் ஓர் இடைக்கால ஜனாதிபதியாக இருப்பேன் என்ற நிலைப்பாட்டின் ஊடாக, பல முக்கியமான சிக்கல்களுக்குள் அகப்படாமல் தப்பிக்கொள்ளப் பார்க்கிறார் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன.

மனோ கணேசன் கூட, கூட்டணி தர்மத்துக்காக பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிடம், தமிழ் மக்கள் தீர்வை எதிர்பார்க்க

தெரிந்துகொண்டே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருவரதும் தேர்தல் அறிக்கைகளுக்கு காத்திருப்பதாக கூறிவருகிறது.

இன்று பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் அறிக்கை வெளியானாலும் கூட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடனடியாக முடிவு எடுக்குமென்று கூறுவதற்கில்லை.

உரிமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லாது போய்விடுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு தமக்கு வேண்டாமென்று ஆளும் கட்சி கூறிவிட்டது. இதனால், எதிரணியின் மட்டுமே பேரம் பேசும் வாய்ப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எஞ்சியிருந்தது. அதற்குள் எதிரணியுடன் சேர்ந்துகொண்ட ஜாதிக ஹெல உறுமய, வெளிப்படையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இணையுமாறு அழைப்பு விடுத்தாலும், உள்ளூர அதனைத் தள்ளிவைப்பதில் இன்றுவரை வெற்றி பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிரணியுடன் இணைந்துகொண்டால், சிங்கள தேசியவாத சக்திகளின் வாக்குகள் கிடைக்காமல் போய் விடுமென்று யோசிக்கிறது எதிரணி. இதனாலேயே, பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் அறிக்கையில், தமிழர் பிரச்சினை தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படாமல், ஒதுங்கியிருக்க முடிவு செய்யப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பேச்சுக்கள், எதிலும் ஈடுபடும் தேவையும் இல்லாமலே போயுள்ளது. இதனை கிட்டத்தட்ட ஒரு புறமொதுக்கப்பட்ட நிலையென்று கூறலாம்.

முடியாதென்று கூறியிருக்கிறார். அவ்வாறாயின், ஆட்சி மாற்றத்துக்கு பின்னர், தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு தொடர்பில் பேசப்படும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அதற்கு யார் பொறுப்பாளிகளாக இருப்பர் என்ற கேள்விகள் இருக்கின்றன.

எந்தவொரு வாக்குறுதியும் இல்லாமல், ஜனாதிபதியை மாற்றுவதற்காக மட்டும் வாக்களியுங்கள் என்று தமிழ் மக்களை கோர முடியாத நிர்ப்பந்த நிலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளது.

குறைந்தபட்சமாக ஒரு வாக்குறுதியாவது தமிழ் மக்களுக்கு கொடுக்கப்பட்டால், அதைக் காரணமாக வைத்து பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்குமாறு கோரமுடியும். என்னும், அதற்கான சூழல் இல்லாதபோது, எதிரணியின் பொது வேட்பாளரை ஆதரிக்குமாறு தமிழ் மக்களிடம் கோரும் தார்மீக



கூட்டத்தில் நடந்த கைகலப்பின்போது எடுக்கப்பட்ட படங்களில் ஐங்கரநேசன் ஆக்ரோஷமாக தண்ணீர்ப் போத்தலை தூக்கி வீசுவதையும், கஜதீபன் பல்லை நறுமிக்கொண்டு தாக்குவதையும் காணக்கூடியதாக உள்ளது. இவற்றை முதலமைச்சர் அவர்களே நேரடியாக பார்த்தும் இருக்கிறார்.

## அஹிம்சா மூர்த்திகளின் அடாவடித்தனம்

# அடக்குவாரா அல்லது விலகுவாரா விக்னேஸ்வரன்?

— சம. செந்தூரன் —

ஐயா விக்னேஸ்வரனை தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்கும் வரை, கொழும்பிலுள்ள உயர் குழாம்களுடன் ஒன்றாக உண்டு, உறங்கி வாழ்ந்த ஒருவரே தவிர, சாதாரண மக்களுடன் பழகிய ஒருவர் அல்ல விக்னேஸ்வரன்.

இன்னும் விரிவாக சொல்லப் போனால், வட கிழக்கிலே தமிழரசுக் கட்சியினர் சிங்கள விரோத, அரச விரோத பேச்சுக்களை பேசிக்கொண்டிருந்தவேளையிலே, அமைச்சர் வாசுதேவ நாணயக்காரா அவர்களின் மகனுக்கு சங்க ஐயா என்று பெயர் வைக்கும் அளவிற்கும், தனது இரு பிள்ளைகளை பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்களுக்கு திருமணம் செய்து வைக்கும் அளவிற்கும் அவரது உறவு இருந்தது.

விக்னேஸ்வரன் ஐயா அவர்களுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூர் கோவிலைத் தவிர வேறெதுவும் தெரியாதென தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே வெளி நாட்டிலுள்ள தொலைக்காட்சி ஒன்றுக்கு வெளிப்படையாக கூறியிருந்தார்.

இதனால் சாதாரண தமிழ் மக்களின் உணர்வுகள் என்னவென்று விக்னேஸ்வரன் ஐயாவுக்கு தெரிந்திருக்க நியாயம் இல்லை. மறுதலையாக, முதலமைச்சர் வேட்பாளர் ஆகும் வரை, சாதாரண தமிழ் மக்களில் பெரும்பாலானோருக்கு விக்னேஸ்வரன் என்றால் யாரென்றே தெரியாதிருந்தது.

**உண்மையிலேயே விக்னேஸ்வரன் ஐயா அவர்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலுள்ள சுரேஷ், செல்வம், மாவை போன்று ஆயுதம் ஏந்தி பலரின் கொலைகளிற்கு காரணமாக இருந்த ஒருவர் அல்ல...**

**சிவஞானம் சிறீதரன் போன்று அப்பாவி மாணவர்களை பலவந்தமாக பிடித்து கொல்லக்கொடுத்தவரும் அல்ல...**

**இரா. சம்பந்தன் அவர்கள் போன்று இன வெறியை கக்கி, இளைஞர்களை தூண்டி, தமது அரசியல் எதிரிகளை கொன்று குவிக்குமாறு அறைகூவல் விடுத்தவருமல்ல...**

**சரவணபவன் போன்று அப்பாவி மக்களின் பணத்தைக் கொள்ளையடித்தவருமல்ல...**

**ஐங்கரநேசன் போன்று வினாத் தாள்களை களவெடுத்து வியா-பாரம் செய்தவருமல்ல...**

இனவாதம் என்றது அறவே இல்லாதிருந்த ஒரு மனிதன். உண்மையிலேயே, தானுண்டு தனது சமய பிரசங்கம் உண்டு என்று கண்ணியமாக மாலை, மரியாதையுடன் வாழ்ந்த மனிதன்.

ஆனால் காலம் அவரை சேரக்கூடாத இடத்தில் கொண்டுபோய் சேர்த்து விட்டது. கள்வர்களின் குகைக்குள், இனத்துவேசிகளின் குகைக்குள் போய் தனது கடைசிக் காலங்களில் மாட்டிக்கொண்டுள்ளார் விக்னேஸ்வரன் ஐயா அவர்கள்.

நாய் வேஷம் போட்டால் குலைத்துத் தான் ஆகவேண்டும். சேற்றுக்குள் இருக்கும் மீன் சேற்று நீரைத் தான் குடிக்க வேண்டும்.

அவ்வாறு தான் இனவாதிகளின் குகைக்குள், பொய்யர்களின் குகைக்குள் மாட்டுப்பட்டுள்ள விக்னேஸ்வரன் ஐயா அவர்கள் பொய்சொல்லியே ஆகவேண்டும். இல்லையென்று சொன்னால், கடந்த மாகாண சபைத்தேர்தலின்போது "பிரபாகரன் பயங்கரவாதியல்ல, மாவீரன்" என்று வல்வெட்டித் துறையிலே வைத்து விக்னேஸ்வரன் ஐயா அவர்கள் கூறியிருக்கமாட்டார்கள்.

உண்மையிலேயே, விக்னேஸ்வரன் ஐயா அவர்களின் உள்ளத்திலிருந்து உதிர்ந்த கருத்துக்கள் அல்ல அவை-கள். கேவலம், எவ்வளவு கீழ்த்தரமாக பேசி என்றாலும் வாக்குகளை பெற்று முதலமைச்சர் ஆகி விட்வேண்டும் என்பதற்காக உதட்டிலிருந்து வந்த கருத்துக்களே அவைகள்.

ஆரம்பத்தில் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் பங்குபற்ற மாட்டோம் என வீராப்பு பேசி, கூட்டத்தைப் பகிஷ்கரித்த முதலமைச்சர் அவர்கள், பின்னர் விழுந்த சால்வையை வெளுத்துப்போட்டு கூட்டங்களில் பங்கு பற்றினார்.

விக்னேஸ்வரன் ஐயா அவர்களுக்கு உண்மையிலேயே போரினால் சொல்லொணா துன்பங்களை அனுபவித்த எமது மக்களில் அக்கறை இருந்திருக்குமேயானால், தங்களது மாறுபட்ட அரசியல் கருத்துக்களை ஒரு புறம் தள்ளிவிட்டு, எமது பிரதேசங்களின் அபிவிருத்தியில் அக்கறை செலுத்தியிருக்க வேண்டும்.

ஆனால், ஆரம்ப காலம் தொட்டு எமது மக்களின் அவலத்திலே அரசியல் பிழைப்பு நடாத்தும் கூட்டமைப்பினரிடம் இதை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? அதனால் தானோ என்னவோ, கொடியவர்களின் கூடாரத்துக்குள் புகுந்து கொண்ட முதலமைச்சர் அவர்களும் எமது மக்களுக்கு உருப்படியாக எதுவும் செய்வதற்கு அக்கறை அற்றவராக மாறியுள்ளார்.

அண்மையிலே யாழ்ப்பாணத்திலே நடந்த அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலே நடந்தது என்ன?

அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து திட்டமிட்டு எமது பிரதேசத்தை முன்னேற்றுவதற்குரிய ஒருங்கிணைப்புக் கூட்டமாக இருந்தபோதிலும், முதலமைச்சர் அவர்கள் அரசாங்கத்தைக் கண்டித்து உரை நிகழ்த்தவே அந்தக் கூட்டத்தைப் பயன்படுத்தினார்கள்.

காலங்காலமாக தமிழ் பிரதேசங்களிலே, அரசை கண்டிப்பதும், பின்னர் பின்கதவால் சென்று அரசிடம் மண்டியிட்டு சலுகைகளை பெற்றுக் கொள்வதும் கூட்டமைப்பினருக்கு வாடிக்கையான ஒன்றாகும். அந்த வகையிலே முதலமைச்சர் பேச்சு தமிழ் அரசியலுக்கு ஒன்றும் புதிதல்ல.

உடன்பாடில்லவிடினும் முதலமைச்சர் பேசி முடியும் வரை ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினர் செவிமடுத்துக் கொண்டே இருந்தார்கள்.

ஆனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பேச முற்பட்ட சமயம், சிவாஜிலிங்கம் போன்றோர் குழப்ப முற்பட்ட வேளையிலே, "நான் பேசும்போது அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆகையினால் நீங்களும் குழப்பாதீர்கள்" என முதலமைச்சர் அவர்களே வெளிப்படையாக கூட்டத்தில் வைத்து கூறி இருக்கின்றார்.

ஆனால் மாகாண சபை கூட்டங்களின் பொது செங்கோலை உடைத்து, முதல்மைச்சரையே குழப்பியடிக்கும் இயக்க பின்னணியை கொண்ட சிவாஜிலிங்கம், கஜதீபன் போன்றோரை முதலமைச்சரினால் கட்டுப்படுத்த முடியுமா?

கூட்டத்தில் நடந்த கைகலப்பின் போது எடுக்கப்பட்ட படங்களில் ஐங்கரநேசன் ஆக்ரோஷமாக தண்ணீர்ப் போத்தலை தூக்கி வீசுவதையும், கஜதீபன் பல்லை நறுமிக்கொண்டு தாக்குவதையும் காணக்கூடியத்ாக உள்ளது. இவற்றை முதலமைச்சர் அவர்களே நேரடியாகப் பார்த்தும் இருக்கிறார்.

தாங்கள் அகிம்சை வழியில் வந்தவர்கள், வன்செயலில் நம்பிக்கை அற்றவர்கள் என்று சத்தியப்பிரமாணம் எடுத்த தமிழரசுக் கட்சியினர், இயக்கப் பின்னணியை கொண்டவர்களை தீண்டத்தகாதவர்களாக பார்க்கிறார்கள், அதே சமயம் இயக்கப் பின்னணியை கொண்டவர்கள் சுமந்திரன் போன்றவர்களை யார் இந்த கறுவா காட்டார்கள்... இவர்களுக்கும் எமது போராட்டத்திற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கிறார்கள்.

இதனால் முதலமைச்சருக்கு தனது உறுப்பினர்களை கட்டுப்படுத்த முடியாத நிலையே உள்ளது. முதலமைச்சர், அவரது கண் முன்னே நடந்த அடாவடித் தனங்களிற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றார்?

முதலமைச்சர் அவர்கள் கண்டும் காணாமல் இருக்கப்போகிறாரா? அல்லது நடவடிக்கை எடுத்து அடக்குவாரா? அல்லது மனச்சாட்சிப்படி ஒதுங்கிச் செல்வாரா?

**விக்னேஸ்வரன் ஐயா அவர்களுக்கு உண்மையிலேயே போரினால் சொல்லொணா துன்பங்களை அனுபவித்த எமது மக்களில் அக்கறை இருந்திருக்குமேயானால், தங்களது மாறுபட்ட அரசியல் கருத்துக்களை ஒரு புறம் தள்ளிவிட்டு, எமது பிரதேசங்களின் அபிவிருத்தியில் அக்கறை செலுத்தியிருக்க வேண்டும்.**

# அதிபர் ஆசிரியர்களின் உரிமையை எவரும் பறித்தெடுக்க முடியாது

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிக்கை

அரசியல்வாதிகள் தமது சுயநலனுக்காக ஒவ்வொருவருக்கும் உள்ள தனிப்பட்ட உரிமைகளையும் சுதந்திரத்தையும் பிரித்தெடுப்பதுவே எமது நாட்டின் வழமையாகிவிட்டது.

அதிலும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு உள்ள அரசியல் உரிமைகளை சரியாக விளங்கிக் கொள்ளாதவர்கள் எம்மை முட்டாள்களாக ஆக்கப்பார்க்கின்றார்கள். என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பல்வேறு அறிவித்தல்களும், அபிப்பிராயங்களும் வெளிவந்துகொண்டிருக்கும் நிலையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தமது அதிபர்கள், ஆசிரியர்களின் நிலையை வெளிப்படுத்தி அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது.

அவ்வறிக்கையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அனைத்து அதிபர்களும், ஆசிரியர்களும் தவறாமல் வாக்களிப்பார்கள் என்றும் தம்சார்ந்த அனைவரையும் வாக்களிக்க முறையான ஆலோசனை வழங்குவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆசிரியர்களாலும் உருவாக்கப்படுகின்ற அனைதத் துறைசார்ந்தவர்களும் அதிபர்கள், ஆசிரியர்களின் வழி நடத்தலில் தொழிற்படுவார்கள். அதேவேளை வாக்களிக்கும் உரிமை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அந்தந்த வயதுகளில் கிடைக்கின்ற தனிமனித உணர்வு ரீதியிலான வெளிப்பாடு. அதனை நாம் பயன்படுத்தாமல் விட்டுவிட்டு எது நடந்தாலும் அதனை பிறர் தலையில் சுமத்துவதற்கு இனிமேலும் நாம் இடமளிக்க முடியாது.

ஆகையால் வரும் ஜனாதிபதித் தேர்தலில் அனைவரும் அவசியமாக வாக்களிக்கவேண்டும் என்ற அறிவுரையை வழங்குமாறு தமிழ்பேசும் அதிபர்கள், ஆசிரியர்களை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்தி நிற்கின்றது. இந்த அறிவுறுத்தலால் நடைபெறுகின்ற வாக்களிப்பானது துல்லியமானதாகவும், முறைகேடற்றதாகவும் அமையும் என்பதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

# குன்றும் குழியுமாகவுள்ள வீதியை புனரமைக்கவேண்டும்

## அனந்தி சசிதரன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குன்றும் குழியுமாக இருக்கும் எனது வீட்டுக்கு போகும் வீதியும் புனரமைக்கப்படவேண்டும் என வடமாகாண மீன்பிடி போக்குவரத்து கிராம அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் குழுநிலை விவாதத்தின்போது அமைச்சர் டெனிஸ்வரனிடம் கோரிக்கை விடுத்தார். அனந்தி சசிதரன் நேற்று முன்தின அமர்வின் போதே அவர் இந்த கோரிக்கையை விடுத்தார். 5வருடத்திற்கும் மேலாக மக்கள் கோரிக்கை விடுத்தும் எனது வீட்டுக்கு செல்லும் வீதி செப்பனிடப்படவில்லை அதேபோல் தற்போது பாடசாலைகளில் மாணவர்கள் சப்பாத்து அணியவேண்டியது அவசியம் ஆகவே மழை காலங்களில் மாணவர்கள் பாடசாலைக்கு போகும்போது இவ்வாறான வீதிகளில் போவதால் சப்பாத்து சொக்ஸ் என்பன நனைகின்றன. இதனால் பாடசாலை மாணவர்கள் அதிகம் பயன்படுத்தும் வீதிகள் அனைததும் திருத்தப்படவேண்டும். இதற்கு நிதி ஒதுக்கீடு செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் தனது கோரிக்கையை முன்வைத்து உரையாற்றினார். (இ)

# பருத்தித்துறை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார போட்டி முடிவுகள்

உள்ளூராட்சி வாரத்தையொட்டி பருத்தித்துறைப் பிரதேச சபையால் நடாத்தப்பட்ட போட்டிகளில் முதல்மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

(நேற்றைய தொடர்ச்சி)

**சித்திரப்போட்டி:-**

**மேற்பிரிவு**

எஸ்.மரியநியூட்டன் (நாகர் கோவில் மகாவித்தியாலயம்), ஆர்.யஸ்மினி (மணற்காடு றோ.க.த.க. பாடசாலை), ரீ.சுகன்யா (மணற்காடு றோ.க.த.க பாடசாலை)

**முன்பள்ளிகளுக்கான போட்டிகள்**

**கதைகூறல்**

கே.பிரஷாம் (சர்வோதய முன்பள்ளி),யோ.அஸ்வினி (விக்னேஸ்வரா முன்பள்ளி) கோ.திசாந் (பெரிய தேவனந்தாய் முன்பள்ளி),

**ஆத்தி சூடி போட்டி**

ஜெ.சியாமி (சர்வோதய முன்பள்ளி) ஜெ.யோசிகாசர் (சர்வோதய முன்பள்ளி), பீ.ஜனகவி புற்றளை சித்தி விநாயகர் (முன்பள்ளி)

**திருக்குறள் மனனப்போட்டி**

ஏ.தர்சனா (புற்றளைசித்திவிநாயகர் முன்பள்ளி), என்.நிகேதா (சர்வோதய முன்பள்ளி), எஸ்.டிசான் (பெரியதேவனந்தாய் முன்பள்ளி), ஜோ.லக்ஷனியா (புற்றளை சித்திவிநாயகர் முன்பள்ளி), ஆர். சுவிஜிந்தரா (புற்றளை சித்திவிநாயகர் முன்பள்ளி)

**பொது அறிவுப்போட்டி**

ரீ.விமல்ஷினி, ஏ.அனந்தா, யோ.விதூபாகரன்

(01) முற்றும்.

# அரசசேவை ஓய்வூதியர்களுக்கான இலவச மொபிடெல் இணைப்பு



அரச சேவை ஓய்வூதியர்களுக்கான இலவச தொலைபேசி மற்றும் மொபிடெல் இணைப்பை வழங்கும்வேலைத்திட்டம் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நன்றிக்கடன் என்ற தொனிப்பொருளுடன் இளைஞர்களால் முதியவர்களுக்கு நன்றி பெருக்குடன் மேற்கொள்ளும் வேலைத்திட்டமாக இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இப் பிரதேசத்தில் உள்ள சகல ஓய்வூதியர்களிற்கும் இத் திட்டம் பொருந்தும்.

இத் திட்டமானது குறித்த பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்கள் மூலம் அமுல்படுததப்பட்டு வருகின்றது.

கரவெட்டி பகுதியில் நன்றிக் கடன் என்ற தொனிப்பொருளுடன் இடம்பெறும் இலவச தொலைபேசி மற்றும் மொபிடெல் இணைப்பை வழங்கும் வேலைத்திட்டத்தை கரவெட்டி பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் வ.மனோராஜ் மற்றும் கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் ஆரம்பித்து வைத்தனர். (48)

# பதிவிருக்கப் பெட்டகம்

“பாராட்டு விழாவில் தலைவர் ஏன் இவ்வளவு டென்ஷனா இருக்கிறார்?”

“தலைவரைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை என்று சொல்லிச் சொல்லி எல்லாருமே பாராட்டாமல் போய் இருந்திட்டாங் களாம்”.

*** *** *** ***

“அந்தக் கட்சியிலே எல்லாரும் எள்ளென்றால் எண்ணெய்யா இருப்பார்கள்?”

“அதுக்காக இப்பிடியா? தலைவர் ஆஸ்பத்திரிக்குப் போனதுமே, கட்சிக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடுவதா?”

*** *** *** ***

“நம் தலைவர் எதுக்கு இலங்கைப் படத்தைக் கட்டிப்பிடிச்சுப் போராட்டம் பண்ணுறார்!”

“நடக்கிறது நாடு தழுவிய போராட்டமாம்!”

*** *** *** ***

“நேற்று உண்ணாவிரதம் இருந்த தலைவருக்கு இன்னொரு தலைவரும் எதிர் சவால் விட்டிருக்கிறார்”

“என்னவென்று?”

“உண்ணாவிரதம் மட்டும்தான் உன்னாலே இருக்க முடியும். நான் நினைச்சால் நாள் முழுக்க உண்ணும் விரதமே இருக்க முடியும் என்று”

*** *** *** ***

“தலைவர் இரண்டே வார்த்தை சொல்லி தொண்டர்கள் அத்தனை பேரையும் மகிழ வைச்சிட்டார்...”

“அப்பிடி என்ன சொன்னார்...?”

“ராஜிநாமா பண்ணுறேன்’ என்றார்...

*** *** *** ***

“தலைவருக்கு இப்ப வந்திருக்கிற எந்தப் புதுசும் தெரியவில்லை ”

“எத வைச்சு சொல்லுறாய்?”

“ஃபேஸ் புக், எந்த கிளாஸ் பிள்ளைகள் படிக்கிறது எண்டு கேட்கிறார்”

*** *** *** ***

“தலைவர் அடிக்கடி சீப்பால தலையை சீவிக்கொண்டே இருக்கிறாரே ஏன்?”

“அவர் நிர்வாகத்தில லஞ்சம் தலை விரிச்சு ஆடுது என்று யாரும் சொல்லிவிடக்கூடாதாம்...!”

*** *** *** ***

“நம் தலைவர் இனி சட்டை போடமாட்டாராமே?”

“அதுவா அவரை யாரும் சட்டை செய்வதில்லையாம், அதாலதான்!”

*** *** *** ***

“அந்தக் காலத்திலே தலைவர் தினமும் பத்து கிலோ மீற்றர் வரை நடந்து சென்று படிச்சாராம்”

“அதுதான் சொன்னேனே... தலைவருக்கும் படிப்புக்கும் ரொம்ப தூரம் என்று”

*** *** *** ***

“எங்கட எம்.பி. ஏனண்ணை பஜீரோவிலே உள்ளே இருந்து கொண்டு தலையை மட்டும் வெளியே நீட்டி காட்டிக்கொண்டே போறார்?”

“அதுவா... எம்.பி. நாலஞ்சு வருஷமா தொகுதிப் பக்கம் தலையை காட்டுறதில்லை எண்டு எவனோ போஸ்டர் அடிச்சு ஒட்டியிருக்கிறான்... அதுதான்”

*** *** *** ***

“கூட்டம் நடக்கிறபோது ஏன் எல்லோரும் தும்மிக்கொண்டே இருக்கிறார்கள்..?”

“காரசாரமான விவாதம் நடந்துகொண்டிருக்காம்..!”

*** *** *** ***

“செய்தியாளர் சந்திப்பில் தலைவர் சொதப்பிவிட்டாராமே!”

“ஆமாம்... விரும்பிப் படிக்கும் பத்திரிகை எது என்று கேட்டதுக்கு கொஞ்ச நாளா குற்றப் பத்திரிகை என்று சொல்லிவிட்டார்”

*** *** *** ***

**நீதிபதி:** தேர்தல் விதியை மீறி இரவு 10 மணிக்கு மேல் பேசினீரா?

**பேச்சாளர்:** 10 மணிக்கு மேல்தான் ஒரு நாலு பேர் பேச்சைக் கேட்க வந்தாங்க

*** *** *** ***

“இந்தப் பத்திரிகையில் வந்திருக்கிற விளம்பரத்தைப் பார்த்தீங்களா தலைவரே?... வேட்பாளர்கள் வாங்க விற்கடயல் செய்ய வேண்டிய எண் என்று சொல்லி உங்களுடைய தொடர்பு நம்பரைக் குடுத்திருக்கிறார்கள்”

# அழகான கிராமமாக ஊரத்தி உருவாக்கப்படும்

## ஈ.பி.டி.பி .வலிகாம இணைப்பாளர் உறுதிமொழி

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட அராலி மத்தி - ஊரத்தி கிராமத்தை நவீன வசதிகள் கொண்ட அழகானதோர் கிராம மாக மாற்றி உதவவேண்டும். இவ்வாறு ஈ.பி.டி.பி' வலிகாம இணைப்பாளரும் - வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலை வருமான சிவகுரு பாலகிருஸ் ண்ன் (ஜீவன்) தெரிவித்தார்.

கடந்த 40 ஆண்டுகால அராலி - ஊரத்திவாழ் மக்களின் அபிவிருத்தி தொடர்பாக ஜீவன் மேலும் கூறுகையில்,

முதற்கட்டமாக அக்கிராமத் தில் வாழும் 30 குடும்பங்களுக் கும் பிரதேச செயலர் - அர சாங்க அதிபர் ஆகியோரின் உதவிகளை பெற்று வீடமைத்து கொடுத்து ஒவ்வோர் குடும்பத் தின் வாழ்விலும் எழுச்சி ஏற் படுத்துவேன்.

சங்கானை மத்தியில் வாழும் பிரதேச சபை காணி குடியிருப் பாளர்களுக்கு சபை காணி உறு திப்பத்திரங்களை வழங்கி அவா களது வாழ்வில் ஒளியேற்றி உள்ளது. விரைவில் அராலி - ஊரத்தியில் உள்ள மக்களுக்கு காணி பகிர்ந்து வழங்கப்படவுள் ளது.

இதற்காகன ஏற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு சபையை கேட்டுள்ளேன். விரை வில் காணி மக்களுக்கு கிடைத் தவுடன் அம்மக்களுக்கு வலி. மேற்கு பிரதேச செயலரின் விசேட ஏற்பாட்டின் கீழ் அரசாங்க அதிபரின் ஆலோசனையுடன் வீடுகள் அமைத்துக் கொடுப்பதற் கான திட்ட முன்மொழிவுகளை முன் வைத்து செயற்படுத்துவேன்.

இதுவரை 20 காணித் துண்டுக ளுக்கான ஆட்சேர்ப்பு முடி வடைந்துள்ளது. இன்னும் 10 துண்டுகளில் காணி பகிர்வதற் கான நடவடிக்கையை சபையும், சமூக வீடமைப்புக் குழுவும், உறுப்பினர்களும் இணைந்தவகை யில் முன்னெடுக்கவுள்ளளேம்.

இத்திட்டங்கள் யாவும் வெற்றி யளிக்க மக்கள் ஒத்துழைபபு வழங்கும் பட்டத்தில் அழகிய கிராம மாகவும், மின்சாரம், வீதி, முன்பள்ளி, சநதை, கடைத் தொகுதி, விளையாட்டு முற்றம் பேன்றனவும் அமைத்து வழங்கி உதவப்படும் என அவர் தெரி வித்தார். (92)

# படையினரின் ஏற்பாட்டில் கிறிஸ்மஸ்




யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்மஸ், புத்தாண்டு தின நிகழ்வுகள் யாழ்.கோட்டைக்கு அருகாமையில் விசேடமாக அமைக்கப்பட்ட இடத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ், மற்றும் யாழ்.மறைமாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஆகியோர் கலந்து கொண்டு கிறிஸ்மஸ், புத்தாண்டு தின நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர்.

300 அடி உயரத்தினை உடைய வர்ண மின் குமிழ்களால் அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்மஸ் மரத்திலான வடிவமைப்புக்கள், மற்றும் இயேசு கிறிஸ்மஸ் தினத்தில் அவதரித்த வரலாறுகளை எடுத்துக்காட்டும் வகையிலான சித்திரங்கள் அலங்கரிக்கப்பட்டதுடன், கரோல் பாடல்களும் இசைக்கப்பட்டன. இவ் விசேட கிறிஸ்மஸ் கூடம் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை பொதுமக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

# சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

மல்லாகத்தைச்சேர்ந்த நாகேந்திரன் பார்த்திபன் கடந்த 17 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியர சின் உயர்நீதிமன்றத்தில் சட்டத் தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

இவர் ஆரம்பக் கல்வியை யாழ்.மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையிலும் இடை நிலைக் கல்வியை யாழ்.இந் துக்கல்லூரியிலும் பயின்றார்.

2010 ஆம் ஆண்டு சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சையில் சித்திபெற்று சட்டக்கல்லூரிக்கு தெரிவானதுடன் சட்டக்கல் லூரிப்பரீட்சையில் தமிழ் மொழி மூல மாணவர்களில் சிறந்தபெறு பேறுகளை பெற்று மறைந்த சட்ட அறிஞர்களின் ஞாபகார்த் தமாக வழங்கப்படும் பல விரு துகளைப் பெற்றுள்ளார் என் பது குறிப்பிடத்தக்கது.

# பெண்வாக்காளர்கள் அதிகம்

எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக் களிப்பதற்கு யாழ். மாவட்டத் தில் தகுதி பெற்ற 4 இலட்சத்து 50 ஆயிரத்து 132 பேரில் 2 இலட்சத்து 34 ஆயிரத்து 186 பேர் பெண் வாக்காளர்கள் என யாழ்.மாவட்ட செயலாளரும் மாவட்ட தெரிவு அத்தாட்சி அதி காரியுமான சுந்தரம் அருமை நாயகம், தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வாக களிக்கவுள்ள யாழ்.மாவட்ட வாக்காளர்கள் தொடர்பில் விளக் கமளிக்கும் சந்திப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இம்முறை தேர்தலில் யாழ். மாவட்டத்திலிருந்து 2 இலட் சத்து 15 ஆயிரத்து 946 ஆண் வாக்காளர்களும், 2 இலட் சத்து 34 ஆயிரத்து 186 பெண் வாக்காளர்களும் வாக்களிக்க வுள்ளனர்.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# அமைச்சரவை பத்திரம் முன்வைத்து அமைச்சர் டக்ளஸ் உதவவேண்டும்

### யாவருக்கும் புகலிடம் [வீடு] திட்டம்

வடக்கில் இடம்பெற்ற கொடிய போர் 2009 – 'மே' மாதம் 19 ஆம் திகதி முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, அமைதி பேணப்பட்டு இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையின் கீழ் உன்னத அபி விருத்தி வடக்கில் இடம்பெறுவதனை ஒவ்வொரு தமிழ் – முஸ்லிம் மக்களும் உணருகின்றனர்.

இன்று வடக்கிற்கு 61 ஆயிரம் மில்லியன் ரூபா பல்வேறு உட் கட்டுமானம், கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், குடி தண்ணீர் என்பவற்றிற்காக செலவழிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு செலவு செய்த விடயங்களை நாடாளுமன்ற உறுப் பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான முருகேசு சந்திரகுமார் ஒவ்வொரு விடயமாக விலா வாரியாக கிளிநொச்சியில் விளக்கியிருந்தார்.

இவ்வாறாக போர் அழிவுக்கு பின்னர் வடக்கில் உள்ள 5 மாவட்டங்களில் போர் உச்சமாக இடம்பெற்ற கிளி நொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கிய நிலையில் ஏனைய மாவட்டங்கள் சம அளவில் அபிவிருத்திகள் இடம்பெறுகின்றன.

இங்கு நாம் குறிப்பிடுவது யாதெனில் இலங்கை ஆசியாவின் அதிசயம் மிக்க ஒரு தேசமாக மாற்றப்பட்டு வருகின்றது.

இதற்காக இலங்கை அரசு வெளிநாட்டு 'வல்லரசு' நாடுகளின் நிதி உதவியுடன் A–9 வீதி, வடக்கு – தெற்குக்கான அதிவேக நெடுச்சாலை, மேம்பாலம், திவிநெகும வாழ்வெழிச்சி, முதியோர் சிறுவர்களுக்கான மானிய உதவி, வேலையற்ற இளைஞர்களுக் கான வேலைவாய்ப்பு, பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு, அரச அலுவலர்களுக்கு பதவி உயர்வு போன்ற பல உன்னத செயற்பாடு கள் இங்கு நடைபெற்றுவருகின்றன.

எனினும் முக்கியமான விடயமாக நாம் சொல்ல முற்படுவது யாதெனில் போரின் போது பல்லாயிரக்கணக்கான மக்களின் வீடுகள் அழிவடைந்துள்ளன.

இந்திய அரசு 50 ஆயிரம் வீடுகள் ஒதுக்கிய போதும் இந்த இந்திய [Indian ltousing scheme] வடக்கு ஏனைய பிரதேசங்க ளுக்கு பிரித்து வழங்கப்பட்டு விட்டது.

தற்போது வடக்கில் 5 மாவட்ட அரசாங்க அதிபர்களும் வறிய நிலையில் உள்ள காணியிருந்தும் 'ஷநிரந்தர வீடு' (Permanent House) அற்ற குடும்பங்களின் விபரங்களை பிரதேச செயலா ளர்கள் [Divisionl Secretaries] ஊடாக பெற்று தொகுத்து வைத் துள்ளனர்.

இதன் மூலம் இன்னும் வடக்கில் 50 ஆயிரத்துக்கும் மேற் பட்டோர் வீடின்றி இருப்பது தெரியவந்துள்ள விடயமாகும்.

மேலும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காணியின்றி மிக வறுமையில் குழந்தைகள், முதியவர்கள், பாடசாலை பிள்ளைகள், மாற்றுவலுவுள்ளவர்களாக ஒவ்வொரு குடும்பங்களும் மிக கஷ் டத்துடன் யாருக்கு விளக்குவது? எவ்வாறு விளக்குவது என்பது புரியாத நிலையில் ஏழ்மையில் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே வடக்கு மாகாணம் துரித முன்னேற்றம் கண்டு வரு கின்ற நிலையில் "யாவருக்கும் புகலிடம்" என்ற மகுட வாக்கியத் திற்கு இணங்க வடக்கின் தலைவரான அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திர குமார், சில்வேஸ்திரி அலன்ரின் [உதயன்] ஆகியோர் இணைந்த வகை யில் அமைச்சரவை பத்திரம் முன்வைத்து வீடற்ற சகலருக்கும் வீடுகள் கிடைத்திட திடசங்கற்பம் பூண்டு வறிய மக்களின் வாழ் வாதாரத்தில் மாற்றத்தை கொண்டு வரவேண்டும்.

இச் செயற்றிட்டத்தை முன்னெடுக்க வடமாகாணத்தின் முதல மைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் கைகொடுத்து உதவுவதுடன் வடக்கின் அரசாங்க அதிபர்கள், காணி ஆணையாளர்கள், பிரதம செயலாளர். மற்றும் வடக்கின் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோ ரும் முன்னின்று உழைக்க முன்வந்து பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் [change] என கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

–பணிப்பாளர்
S.E.M.F


# பன்முக சேவைக்கு பாராட்டு நவாலியில் இன்று விழா

(யாழ்ப்பாணம்)

கலாபூஷணம் விருது பெற்ற நவாலியூர் பல்கலைவேந்தர் வைத்திலிங்கம் கமலநாதனின் பன்முக சேவையை பாராட்டி இன்று நவாலியில் மாபெரும் விழாவொன்றினை எடுக்க நவாலி சமூகம் திரண்டுள் ளது.


நவாலி முதியோர் சங்க தலைவர் மா.செல்வராஜா தலைமை யில் விழா இடம்பெறும். நவாலி முருகானந்தா சனசமூக நிலைய முன்றலில் இன்று மாலை 2 மணிக்கு இடம்பெறும். இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரன், கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக உதவிப் பிரதேச செயலர் திருமதி.நேசரட்ணம் செல்வகுமாரி, சமூக சேவைகள் அதிகாரி வே.சிவராசா, அபிவிருத்தி அலுவலர் திருமதி றஜீபன் தர்மனி, கிராம உத்தியோகத்தர் தி.நித்தியா னந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர்.


இச் செயற்பாட்டினை நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபை, முருகானந்தா சனசமூகநிலையம், நவாலியூர் மக்கள் சேவை ஒன்றியம், சென்ற் பீற்றர் சனசமூக நிலையம், ஆழ்கடல், ஆனைக்கோட்டை சாம்சன் நிறுவனம், நவாலி மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் நவாலி ஊன்றுகோல் அறப்பணியகம் என்பன ஒருங்கிணைந்த வகையில் முன்னெடுக்கப்படவுள்ளதாக நவாலி கிழக்கு முதியோர் சங்க செயலாளர் செல்லத்துரை மகேந்திரன் அறிவித்துள்ளார். (92)

02. 

உருவின் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவை மொத்த உருவின் பரப்பளவின் பின்னமாக காட்டுக?
..........................................

03. நீளத்தை அளக்கும் நாச்சில்லொன்றின் சுற்றளவு 50cm ஆகும். அதில் ஒவ்வொரு 50cm முடிவிலும் மணி ஒலிக்கும். நாதச்சில்லானது 10m தூரத்தை கடந்து சென்றது. எனின் அதில் எத்தனை தடவைகள் மணி ஒலித்திருக்கும்?
..........................................

04. 
உருவில் உள்ள நேரத்தின் படி எத்தனை நிமிடங்களுக்கு முன்னர் கடிகாரத்தில் முட்கள் செங்கோணமாக அமைந்திருக்கும்?
..........................................

05. 

A,B,C,D என்பவற்றின் மொத்த தூரம் 36cm எனின் Aயிலிருந்து D வரையான தூரம் யாது?
..........................................

06. 80090யில் இருந்து 91ஐ கழிக்க வரும் பெறுமானம் யாது? ..........................................


07. 90999க்கு 111ஐ கூட்டும் போது வரும் பெறுமானம் யாது? ..........................................

08. கலை நிகழ்ச்சி ஒன்று மு.ப.9.15க்கு ஆரம்பித்து 3மணித்தியாலங்களின் பின் முடிவுற்றது. எனின் கலை நிகழ்ச்சி முடிவுற்ற நேரத்தை நியம நேரத்தில் தருக? ..........................................

09. பேருந்து வண்டி ஒன்று 45நிமிடங்களில் ஒன்பது கிலோமீற்றர் தூரம் பயணிக்கும். அப்பேருந்தானது மாறா வேகத்தில் 1மணித்தியாலம் 15நிமிடங்களில் பயணிக்கக் கூடிய தூரம் எத்தனை கிலோமீற்றராகும்?
..........................................

10. 5l பாலில் இருந்து 250 l பால் வெளியே எடுக்கப்பட்ட பின் எஞ்சியுள்ள பாலில் இருந்து 250ml கொள்ளளவுள்ள எத்தனை பால் பைக்கற்றுக்கள் தயாரிக்கலாம்? ..........................................

11. ரூபா 37.50 இற்கு வர்ணச்சோக் பெட்டியொன்றையும் ரூபா 27.00 இற்கு அடிமட்டம் ஒன்றினையும் வாங்கிக்கொண்டு ரூபா 100ஐ வழங்கிய போது கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? ..........................................

12. 
இத்திண்மத்திற்கு உரிய விளிம்புகளின் எண்ணிக்கை யாது?
..........................................

13. பின்வரும் எண்வரிசையை ஒழுங்குபடுத்தும் போது நடுவில் வரும் எண் யாது? ..........................................

$\frac{1}{4}$  $\frac{5}{8}$  $\frac{2}{4}$  $\frac{3}{8}$  $\frac{7}{8}$  $\frac{3}{4}$  $\frac{1}{8}$

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1).I | (2).II | (3).II | (4).III | (5)II | (6).II | (7).II | (8).III | (9).I | (10).II |
| (11).III | (12).I | (13).III | (14).I | (15).III | (16).III | (17).II | (18).II | (19).I | (29).III |
| (21).II | (22).I | (23).III | (24).II | (25).II | (26).III | (27).II | (28).III | (29).III | (30).II |
| (31).I | (32).II | (33).I | (34).II | (35).III | (36).III | | | | |

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



1 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்க

(01) பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான் இந்தப்
பாரிடை துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்
ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்று சேர்க்கப
பேரறிவாளர் நெஞ்சில்
பிறந்த பத்திரிகைப்பெண்ணே

01. பண்டிதன் என்ற பொருளைத்தரும் மற்றொரு சொல்லைத் தருக? ..........................................
02. இங்கு பெண்ணுக்கு ஒப்பாக கூறப்படுவது எது? ..........................................
03. பாடலில் இடம்பெற்றுள்ள பெயரடைமொழி எது? ..........................................
04. புறத்தில் என்ற சொல்லிற்கான எதிர்ச்சொல்லை தருக? ..........................................
05. உலக விடயங்களை அறியாதவர்களை குறிக்க பயன்படுத்திய சொற்றொடர் எது? ..........................................
06. இப்பாடல் யாரால் பாடப்பட்டது? ..........................................

(02). இடைவெளிக்கு பொருத்தமான உரிய சொல்லை வைத்து நிரப்புக
01. ..........................................இராமனை பெற்றாள்
02. ..........................................சத்துருக்கனையும், இலக்குமனையும் பெற்றாள்

(03). வாக்கியங்களுக்கு பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக
01. எப்போ எனக்கு விடிவு கிட்டும்.........
02. ஆ சுக்கிரீவனா அவன் இருக்கும் இடம் எனக்குத் தெரியும் ..........

(04). சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக
01. திடீரெனத் / ஒன்று / கனனிப்பொறி / அன்று / தோன்றியது
..........................................
02. எமது / நாம் / வேண்டும் / பாதுகாத்தல் / நோய் வராமல் / உடலை
..........................................

(05). மரபுச்சொற்களை பயன்படுத்தி இடைவெளி நிரப்புக
01. வாழையின் பிஞ்சு கச்சல் என்பது போல பலாவின் பிஞ்சு ..........................................ஆகும்
02. மானுக்கு பிணை எனின் பூனைக்கு ..........................................

(06). உவமைத்தொடருக்கான கருத்தை தருக
01. பனையால் விழுந்தவனை மாடேறி குத்தியது போல ..........................................
02. நீர் குமிழி போல ..........................................

(07) தனிச்சொல்லை தருக

01. பிறர் நலன் பேணுபவன் ..........................................

02. பத்து வருடங்களைக் கொண்ட காலப்பகுதி..........................................

(08). தனிவாக்கியத்தை தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுக

01. கணேஷ் எனது அப்பாவின் நண்பராவர்
02. குமார் எனது அப்பாவின் நண்பராவர்

..........................................

01. அக்கா இன்று கணிதம் படித்தாள்
02. நான் இன்று கணிதம் படித்தேன்

..........................................

(09). சரியான சொல்லை தெரிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக

01. எங்கள் பாடசாலையில் நிறைய ..................... (வலங்கள், வழங்கல், வளங்கள்) உண்டு

02. இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பல ..................... (வழிகள், வளிகள், வலிகள்) உள்ளன

(10). கருத்தினை தமிழில் எழுதுக

01. Please sit here ..........................................

02. shall We clean the class room? ..........................................

(11). கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக

01. பத்திரிகை வாசிப்போம் ..........................................

02. எட்டு ..........................................

(12). கருத்தினை தமிழில் எழுதுக

01. மல்லி கியா த? ..........................................

(13). தங்கை சோறு சாப்பிட்டாள் என்ற தொடரை சிங்களத்தில் கூறும் விதத்தினை தமிழில் எழுதுக

..........................................

(14). மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக

01. சவர்க்கார கட்டி ஒன்று மிகவிரைவாக கரைவது
1) சுடுநீரில் 2) தண்ணீரில் 3) குளிந்தநீரில் 4) மழைநீரில்

02. பூனை தனது குட்டிகளை காவிச்செல்லும் போது கௌவுவது குட்டியின்
1) நெஞ்சுப்பகுதியை 2) வயிற்றுப்பகுதியை 3) தலைப்பகுதியை 4) கழுத்துப்பகுதியை

03. வெசாக் விழாவை இலங்கையில் ஆரம்பித்து வைத்த மன்னன் யார்?
1) தேவநம்பியதீசன் 2) துட்டகைமுனு 3) மகாசேனன் 4) பண்டுகாயன்

04. பண்டுகாயன் காலத்தில் அமைக்கப்பட்ட குளம் எது?
1) ஐயவாவி 2) திசாவாவி 3) மினிப்பே 4) யோத எல

05. இரும்புச்சத்து நிறைந்த உணவுக்கூட்டம் பின்வருவனவற்றுள் எது?
1) பசளிக்கீரை - பாசிப்பயறு
2) வற்றாளை - வெண்
3) கடல்மீன் - மரக்கறி வகை
4) நிலக்கடலை - சிறகவரை

06. கண்டமாலை நோய் ஏற்படுவதற்குக் காரணம்
1) அயடின் குறைபாடு
2) கல்சியம் குறைபாடு
3) இரும்புச்சத்து குறைபாடு
4) விற்றமின் குறைபாடு





07. இவ்வுருவிலுள்ள செயற்பாட்டுக்கு அடுத்து வரும் சூரிய நமஸ்கார செயற்பாடு எது?




08 இவ்வுருவில் காணப்படும் பறவை யாது?



1) இருவாச்சி 2) ஆட்காட்டிக்குருவி 3) நீலப்புள் 4) நாகணவாய்

09. நீலச்சாயத்தையும், சிவப்புசாயத்தையும் சமஅளவில் கலப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய புதிய நிறம்?
1) கபிலம் 2) ஊதா 3) பச்சை 4) செம்மஞ்சள்

10. இவ்வுருவிலுள்ள மின்சுற்றில்



1) A மின்குமிழ் மட்டும் ஒளிரும் 2) B மின்குமிழ் மட்டும் ஒளிரும்
3) இரு மின்குமிழ்களும் ஒளிராது 4) இரு மின்குமிழ்களும் ஒளிரும்

11. நீர் பற்றிய கூற்றுக்களுள் பிழையானது?
1) நீரில் உப்புக் கட்டிகள் கரையும் 2) நீரில் பனிக்கட்டி மிதக்கும்
3) நீரினூடாக இசையை எழுப்ப முடியும் 4) நீரில் தேங்காய் அமிழும்

12.



1. வடமத்திய மாகாணத்தை சேர்ந்த இரு மாவட்டங்கள்
1) A.B 2) B.C 3) D.E 4) C.D

2. HKG எழுத்துக்களை குறிக்கும் மாவட்டங்கள் அமைந்துள்ள மாகாணம்
1) ஊவா மாகாணம் 2) சப்ரகமுவ மாகாணம்
3) மத்திய மாகாணம் 4) மேல் மாகாணம்

13. எல்லே விளையாட்டுக்குரிய மைதானம்
1) சிறியதாக காணப்பட வேண்டும் 2) சதுர வடிவனதாக இருக்க வேண்டும்
3) விசாலமானதாக இருக்க வேண்டும் 4) வட்ட வடிவில் இருக்க வேண்டும்

14. தனது உடலின் உஷ்ணத்தை குறைத்து கொள்வதற்காக நீர் நிலைகளில் உறங்கிக் கொள்வது
1) பனிக்கரடி 2) காட்டுப்பன்றி 3) எருமை 4) சிறுத்தை புலி

15. சிறந்த வித்தொன்றின் பண்பாக கூறமுடிவது
1) மேற்றோல் சுருங்கி இருத்தல் 2) உள்ளீடு நிரம்பியிருத்தல்
3) மேற்றோல் மேடு பள்ளமாக காணப்படல் 4) மேற்றோல் காயங்களுக்கு உட்பட்டிருத்தல்

16. பின்வருவனவற்றுள் மஞ்சள் நிற பூ எது?
1) பூவரசு 2) நாகலிங்கம் 3) பிறைப்பூ 4) காட்டுமல்லிகை

17. வளியின் அமுக்கம் அதிகரிக்கும் போது ஒலி எழுப்பப்படும் இசைக்கருவி எது?
1) தபேலா 2) புல்லாங்குழல் 3) டிரம்பட் 4) சங்கு

18. தேசிய இலட்சினையில் இல்லாத அம்சம்
1) நெற்கதிர் 2) புன்கலசம் 3) தாமரை இதழ் 4) தர்மசக்கரம்

(15) கணித வினாக்களுக்கு விடை தருக

01. பிஸ்கட் பைக்கற்று ஒன்றின் நிறை 400g ஆகும். அவ்வாறான 5 பிஸ்கட் பைக்கற்றுக்களின் மொத்த நிறையை கிலோகிராமில் தருக?

..........................................

# குருநகர் வலைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தகவல்



குருநகர் மீன்பிடி வலைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு வ்ருட இறுதி மேலதிக கொடுப்பனவை அதிகரித்து கொடுப்பதற்கு துரித நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் குருநகரில் அமைந்துள்ள வுடகடல் நிறுவனத்தின் மீன்பிடி வலைத் தொழிற்சாலையில் நேற்று இடம்பெற்ற வருடாந்த ஒளி விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நிறுவனத்தில் வருட இறுதியில் வழங்கப்படும் மேலதிக கொடுப்பனவு 2,000 ரூபாவாக உள்ளபோதிலும் அதனை அதிகரித்து 10,000 ரூபாவாக கொடுப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இக்கொடுப்பனவை அடுத்தவாரம் முற்பகுதியில் நிறுவன ஊழியர்களுக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

அதனடிப்படையில் இந்நிறுவனத்தினது தொழிற்துறைகள் மேம்பாடு காணப்படும் அதே வேளை, பணியாளர்களது வாழ்வாதாரமும், பொருளாதாரமும் மேம்படும் வகையில் திட்டங்களை செயற்படுத்தும் வகையில் பணியாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்.

அதுமட்டுமன்றி நியாயத்தின் அடிப்படையில் நீங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வு காணப்படும்.

இந்நிறுவனத்தினதும் பணியாளர்களினதும் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் என்னால் முன்னெடுக்கப்பட்ட சகல செயற்றிட்டங்களுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முழுமையான ஆதரவை வழங்கி வருகின்றார் என்றார்.

இந்நிகழ்வில் யாழ். மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா வடகடல் நிறுவன கண்காணிப்பாளர் அகஸ்ரின் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# வகுப்பறைக் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வகுப்பறை கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

பாடசாலை அதிபர் ம.அன்ரன் குலதாஸ் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் பாடசாலை மாணவர்களின் அணி வகுப்புடன் அழைத்து வரப்பட்டு இராணுவத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு கைத்திறாமணி ஆடைத்தொழிற்சாலையின் 70 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் 100 அடி நீளமும், 25 அடி அகலமும் உடைய வகுப்பறை கட்டட புனர்நிர்மாணத்துக்கான அடிக்கல்லினை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர் இணைந்து நாட்டி வைத்துள்ளனர்.

இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ரி.பிரதாபன், புதுக்குடியிருப் இராணுவத் தளபதி, கைத்திறாமணி நிறைவேற்றுப் பணிப்பாளர் றோனி நடராஜா வலயக் கல்விப் பணிப்பாளர் மத குருமார்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (40)

# சாவகச்சேரி நகரசபையின் பாதீடு முன்மொழிவு நிறைவேற்றம்

சாவகச்சேரி நகர சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபை தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பி.ப 2 மணியளவில் இடம்பெற்ற அமர்வில் ஆளும் த.தே.கூ.கூறுப்பினர்கள் 09 பேரும் எதிர்க்கட்சியின் ஐ.ம.சு.கூ. உறுப்பினர்கள் 02 பேரும் கலந்துகொண்டனர்.

இவ் அமர்வில் நகர சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தினை நகர சபை தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை முன்வைக்க நகரசபை உறுப்பினரும் சுகாதார குழு தலைவருமான ஞா.கிஷோர் முன்மொழிய ஆளுங்கட்சி நகரசபை உறுப்பினர் த.சுதர்சன் வழிமொழிய சபையினரால் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

மேலும் அமர்வில் நகர சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் நகர சபையின் மொத்த மீண்டு வரும் வருமானமாக நாலு கோடியே முப்பது இலட்சத்து முப்பத்திரண்டாயிரம் ரூபாய் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் நகர சபை நிதியிலிருந்து 23 வீதிகளும். J/300 கிராமசேவையாளர் பிரிவில் பொதுநோக்கு மண்டபம் அமைகக்கப்படவுள்ளதுடன் சபைக் குட்பட்ட வீதிகளும் ஒருகோடி எண்பது இலட்சம் ரூபாவில் அபிவிருத்தி மேற்கொள்ளப் படவுள்ளன.

அத்துடன் நெல்சிப் திட்ட நிதியிலிருந்து 10 வீதிகளும். மாகாண சபை நிதியிலிருந்து 06 வீதிகளும் 2015 ஆம் ஆண்டு அபிவிருத்தி மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வரவுசெலவுத்திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது எதிர்க்கட்சியின் இரு உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (63)

# சட்டக்கல்லூரிக்கு மாணவன் தெரிவு



அண்மையில் வெளியான சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் எம். எஸ். முஹமட் ஜெமில் வவுனியா மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் வவுனியா மாவட்டத்தின் முதல் முஸ்லிம் மாணவர் ஆவார்.

வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரும் வட மாகாணத்தின் பிரபலமான ஆயுர் வேத வைத்தியர் கலாபூஷணம் கலாநிதி அலியார் முஹம்மது சரீப் (J.P) பாத்திமா சரீப் தம்பதிகளின் புதல்வருமாவார்.

வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய தேசிய பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.றம்ஸீன் மற்றும் கைத்தொழில் வர்த்தக அமைச்சரின் இணைப்பாளர் எம் .எஸ்.அப்துல் பாரி மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் எம்.எஸ் அலி அவர்களின் சகோதரரும் ஆவார்.

இவரை வவுனியா மாவட்ட பட்டாணிச்சூர் கல்விச்சமூகமும் அல- மதார் விளையாட்டுக்கழகமும் பாராட்டியுள்ளது. (70)

# அதிபர்களுக்கு அறிவுறுத்தல்

(அச்சுவேலி)

எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களாக செயற்படவுள்ள பாடசாலை மலசல கூடங்களில் ஏதாவது திருத்த வேலைகள் செய்யப்படவேண்டியிருப்பின் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் அப்பகுதிக்குப் பொறுப்பான கிராம சேவையாளருக்கு இதனைத் தெரியப்படுத்தி கிராமசேவகருக்கூடாக தேர்தல்கள் திணைக்களத்திற்கு அதனைத் தெரியப்படுத்துவதன் மூலம் திருத்தங்களை மேற்கொள்ள முடியும் என பாடசாலை அதிபர்களுக்கு தெரிவிக்கப் பட்டுள்ளது.

எனவே தேர்தல் தினத்தன்று குறித்த பாடசாலைகளில் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ளும் வகையிலேயே மலசலகூடங்களில் ஏதேனும் சிறு திருத்தங்கள் காணப்படின் அதனை உடனடியாக கிராம சேவையாளருடாக தேர்தல்கள் திணைக்களத்திற்கு தெரியப் படுத்தும்படி அதிபர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (03)

# மட்டக்களப்பில் தொடர் மழை வெள்ளத்தில் மூழ்கின கிராமங்கள்


மட்டக்களப்பு மாவட்டத்தில் இடைவிடாது பெய்யும் கடும் மழை காரணமாக பல இடங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

கடந்த 24 மணிநேரத்தில் 147.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் இங்கு பல இடங்களில் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் வீதிகள் பல நீரில் மூழ்கி போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

அத்துடன் பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள், பொது கட்டடங்கள் தபால் நிலையங்கள், போக்குவரத்துச் சபை டிப்போ என்பனவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதேவேளை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ளனர்.



புதிய காத்தான்குடி, பிரதொஸ்நகர், ஏத்துக்கால், செல்வாநகர், தர்மபுரம், ஆரையம்பதி, காத்தான்குடி, நாவற்குடா, செங்கலடி, கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி உட்பட மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதேவேளை, பொலன்னறுவை - மட்டக்களப்பு வீதியின் மன்னம்பிட்டிய மற்றும் கல்லெல்ல ஆகிய பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதனால் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை பதுளை - மஹியங்கனை வீதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு மண்மேடு சரிந்து விழுந்ததில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக

# உயிரிழந்தவருக்கு அனுதாபம்

எழுவைதீவு கடலில் உயிரிழந்த மீனவரின் குடும்பத்திற்கு பெருந்தொகை நஷ்டஈட்டினை வழங்க வேண்டும் என வட மாகாண உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எழுவைதீவு கடற்பரப்பில் கரையிலிருந்து மூன்று கி.மீ தொலைவில் மீன்பிடித்துக் கொண்டிந்த எழுவைதீவு கடற்றொழிலாளர் சங்க உபதலைவரும் எழுவைதீவு நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்தவருமான அன்ரனி யேசுதாசனை நெடுந்தீவிலிருந்து காங்கேசன் துறை நோக்கி வேகமாக வந்த கடற்படைப்படகு மோதி உயிரிழந்துள்ளார்.

நான்கு பெண் பிள்ளைகளும் இரண்டு ஆண்பிள்ளைகளுமாக மொத்தம் ஆறு பிள்ளைகளின் தந்தையாகிய இவரே தினமும் கடலுக்கு சென்று மீன்பிடித்து குடும்பத்தின் வாழ்க்கை நிலையைப் பார்த்து வந்தவர். அடிப்படையிலே மிகவும் வறுமைக்கோட்டுக்குள் வாழ்ந்த இக்குடும்பம் தந்தை யாரையும் கணவரையும் இழந்து இன்று செய்வதறியாது சோகத்தில் தததளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# மூவாயிரம் தீவிரவாதிகளுக்கு விரைவில் தூக்குத்தண்டனை

## பாகிஸ்தான் அறிவிப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டு, பொலிஸில் சிக்கி, தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள, 3,000இற்கும் மேற்பட்ட பல்வேறு பயங்கவாத அமைப்புகளைச் சேர்ந்த பயங்கரவாதிகளுக்கு, விரைவில் தண்டனை நிறைவேற்றப்பட உள்ளது.

பெஷாவர் இராணுவப் பள்ளியில், தலிபான் பயங்கரவாதிகள் கடந்த, 16ஆம் திகதி நடாத்திய தாக்குதலில், 132 பள்ளிக் குழந்தைகள் உட்பட, 141 பேர் இறந்ததை அடுத்து, பயங்கரவாதிகள் மீதான பிடியை இறுக்கிய பிரதமர் நவாஸ் ஷெரீப் அரசு, பயங்கரவாத செயற்பாடுகளுக்காக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள, 3,000 பயங்கரவாதிகளை, தூக்கிலிட முடிவு செய்துள்ளார்.

முதற்கட்டமாக, அடுத்த வார தொடக்கத்தில், 80 பயங்கரவாதிகள் தூக்கு கயிற்றை முத்தமிட உள்ளனர். இதற்காக, கடந்த ஆறு ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தூக்குத்தண்டனை நிறைவேற்ற தடையை, பிரதமர் ஷெரீப் தளர்த்தியுள்ளார். பெஷாவர் தாக்குதல் சம்பவத்தின் எதிரொலியாக, அதிபர் மம்னூன் உசேன், 17 கருணை மனுக்களை நிராகரித்துள்ளார். இதன் மூலம் ஏழு ஆண்டு தலிபான் அட்டூழியத்தை பாகிஸ்தானில் இருந்து வேரடி மண்ணாக அகற்ற, பாகிஸதான் நீதித் துறையும் முன்வந்துள்ளது. பயங்கரவாதிகள் வெளியே நடமாட முடியாத வகையில் தூக்குத் தண்டனை விதிக்க உத்தரவிட்டுள்ளார்.

பாகிஸ்தானில், ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக தூக்கில் தொங்க விடப்படுபவர் என்ற பெயரை, டாக்டர் உஸ்மான் மற்றும் அர்ஷத் முகமது என்ற பயங்கரவாதிகள் பெற உள்ளனர். இவர்களுக்கு ஞாயிறு அன்று அல்லது அதற்கு முன்னதாக தண்டனை நிறைவேற்றப்படலாம் என, எதிர்பார்க்கப்படுகிறது.

# காதலி மீது அசிட் வீசிய முதியவருக்கு சிறைத்தண்டனை



(லண்டன்)

20 வயது காதலி மீது ஆசிட் வீசிய 80 வயது முதியவருக்கு 18 ஆண்டுகள சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

லண்டனை சேர்ந்தவர் முகமது ரபிக் (80). இங்கிலாந்து வாழ் பாகிஸ்தானியர். இவர் அதே பகுதியை சேர்ந்த விக்கி கார்ஸ்மேன் என்ற 20 வயது பெண்ணைக் காதலித்தார்.

கூலிப்படை வாலிபர்களை கொண்டு ஹார்ஸ்மேன் வீட்டுக்கு சென்று அவரது முகத்தில் ஆசிட் வீசினார்கள். அதில் அவளது முகம், கழுத்து, கால், கைகளில் தீக்காயம் ஏற்பட்டு கருகியது. அதைத் தொடர்ந்து அவர் அறுவை சிகிச்சை செய்து குணமடைந்தார்.

இந்த வழக்கு தொடர்பாக முகமது ரபிக் கைது செய்யப்பட்டார். அவர் மீது நீதிமன்றில் வழக்குத்தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு 18 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது, ஏற்கனவே கூலிப்படையை சேர்ந்த ஷன்னான் கீப்ஸ்சுக்கு 12 ஆண்டும், ஸ்டீவன் ஹோல் மஸ்சுக்கு 18 ஆண்டுகள் தண்டனையும் வழங்கப்பட்டது.

## உலகச் செய்திகள்

# உலகிலுள்ள அமெரிக்கர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்

## வெளியுறவுத்துறை அறிவுறுத்தல்



(வொஷிங்டன்)

அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து, உலகம் முழுவதிலும் உள்ள அமெரிக்கர்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி அமெரிக்கா கூறியுள்ளது.

சிட்னி சம்பவம் தனி ஓநாயின் தாக்குதல். இதனைத் தொடர்ந்து, அமெரிக்கர்கள் கூடுதல் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். தீவிர கண்காணிப்பு மற்றும் தனி மனித பாதுகாப்பை அதிகரிக்க தங்களால் முடிந்ததை செய்ய வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அறிவுறுத்தியுள்ளது.

இந்த விடுமுறை காலத்தில் அமெரிக்க அரசு கட்டடங்கள மீது மட்டுமில்லாமல் உணவகங்கள், பொருட்கள் வாங்க மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பள்ளிகள் போன்றவையும் தீவிரவாதிகளின் இலக்காக இருக்கும் என்பதையே இதற்கு முன் நடந்த தாக்குதல்கள் கடுமையாக உணர்த்துகின்றன. வெளிநாடுகளில் வசிக்கும் அமெரிக்கர்கள் மீது பொது இடங்களில் தீவிரவாதிகள் தாக்குதல் நடாத்தப்படும அபாயம் இருப்பதால் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும் என்றும் வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

# மோடிக்கு 2ஆவது இடம்



ஜப்பானை சேர்ந்த தர நிர்ணய நிறுவனமான, ஜி.எம்.ஓ., உலகம் முழுவதும், 26 ஆயிரம் பேரிடம் கருத்துக்கணிப்பு நடத்தி, உலக அளவில் சிறப்பாக செயறபடும், நாட்டின் தலைவர் யார் என கேட்டு, முதல், 30 தலைவர்களை தெரிவித்துள்ளது. அந்த பட்டியலில், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார் முதலிடத்தில், சீன அதிபர் ஜி ஜின்பிங் உள்ளார்.

3ஆம் இடத்தில் ஏஞ்சலா மொர்க்கல், (ஜெர்மனி அதிபர்) 4ஆம் இடத்தில் பிரான்கோயிஸ் ஹாலந்தே, பிரான்ஸ் அதிபர்5ஆம் இடத்தில் ஷின்ஜோ அபே, ஜப்பான் பிரதமர் 6ஆம் இடத்தில விளாடிமிர் புடின், ரஷ்ய அதிபர் 7ஆம் இடத்தில பாரக் ஒபாமா, அமெரிக்க அதிபர் 8ஆம் இடத்தில டேவிட் கேமரூன், பிரிட்டன் பிரதமர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

# ரஜினி மீது கிரிமினல் வழக்கு



(தேனி)

ரஜினி உட்பட லிங்கா படக்குழுவினர் மீது மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் நாளைமறுதினம் மதுரை உச்ச நீதிமன்ற கிளையின் அறிவுரைப்படி சிவில் மற்றும் கிரிமினல் வழக்கு தொடர உள்ளதாக "முல்லைவனம்" பட இயக்குனர் ரவிரத்தினம் தெரிவித்துள்ளார்.

முல்லைவனம் பட இயக்குனர் ரவிரத்தினம் கூறியதாவது, முல்லைவனம் 999 என்ற படத்தின் கதையை உருவாக்க எனக்கு மூன்று ஆண்டுகள் ஆனது. கடந்த 2013 பெப்ரவரி 23இல் சென்னையில் படபூஜை நடந்தது. அப்போது நான் கதை குறித்து பேசினேன். இந்த விவரங்களை "யூ டியூப்"பில் வெளியிட்டனர். அதில் இருந்து என் கதையை திருடி லிங்கா படத்திற்கு பயன்படுத்திக் கொண்டனர். முல்லைவனம் படத்தில் நான் உருவாக்கிய அதே "கிளைமாக்ஸ்" லிங்கா படத்தில் உள்ளது. இதனால்தான் நான் மதுரை உச்ச நீதிமன்ற கிளையில் வழக்கு தொடர்ந்தேன்.

சிலர் கதை திருடியதற்கு ரஜினி மீது ஏன் வழக்கு தொடர வேண்டும் என்கின்றனர். ரஜினிக்காகவே இந்த கதையை திருடியுள்ளனர். எனவே நாளை மறுதினம் மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் ரஜினி, இயக்குனர் கே.எஸ்.ரவிக்குமார், தயாரிப்பாளர் ராக்லைன் வெங்கடேஷ், கதாசிரியர் பொன்குமரன் ஆகியோர் மீது சிவில் மற்றும் கிரிமினல் வழக்கு தொடர உள்ளேன் என்றார்

# ஜப்பானில் குளிர்கால பனிப்புயல் 11பேர் பலி; இயல்பு நிலை பாதிப்பு



ஜப்பானில் வீசி வரும் குளிர்கால பனிப் புயலுக்கு 11 பேர் பலியாகி உள்ளனர். இதற்கிடையே மோசமான வானிலை தொடரும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

ஜப்பானின் மத்திய பகுதிகளில் கடந்த சில தினங்களாக கடும் பனிப்பொழிவு நிலவுவதுடன் குளிர் காற்றும் வீசி வருகிறது. இதனால் எங்கு பார்த்தாலும் பனி படர்ந்துள்ளது. சில இடங்களில் 2 மீற்றர் உயரத்துக்கு பனிக்கட்டிகள் குவிந்துள்ளன. குறிப்பாக சாலைகளில் பனிக்கட்டிகள் உறைந்திருப்பதால் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. புல்லட் ரயில்கள் தாமதமாக இயக்கப்படுகின்றன. நூற்றுக்கணக்கான விமானங்கள் குறிப்பாக உள்நாட்டு விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

கடும் பனி காரணமாக, பனிக்கட்டிகளை அகற்றிக் கொண்டிருந்த போது பள்ளத்தில் தவறி விழுந்த தீயணைப்புப் படை வீரர், 79 வயது முதியவர் உட்பட 11 பேர் பலியாகி உள்ளனர். மேலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்த சாலை விபத்துகளில் சிக்கி சிலர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்துள்ளனர்.

# ராமேஸ்வரத்தில் சூறாவளி காற்று

(ராமேஸ்வரம்)

ராமேஸ்வரம் தீவு, மண்டபம் பகுதியில் சூறாவளி காற்று வீசுவதால், கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு, இராட்சத அலைகள் எழுகின்றன. கடந்த சில நாட்களாக ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் பகுதியில் சூறாவளி காற்று வீசி வருவதால், கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.



8 அடி உயரத்திற்கு இராட்சத அலைகள் எழுகின்றன. பாம்பன் ரயில் பாலம், மண்டபம் கோயில் வாடி கடற்கரையில் இராட்சத அலைகள் ஆக்ரோஷத்துடன் மோதுகின்றன. தொடர் சூறாவளி காற்றால் பாம்பன், தனுஷ்கோடி நாட்டுப படகு மீனவர்கள் பெரும் சிரமத்துடன் மீன்பிடிக்கு சென்றனர்.

# முழங்காவில் கமக்கார அமைப்பிற்கு நிலக்கடலை உடைக்கும் இயந்திரம்

(முழங்காவில்)

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் கமக்கார அமைப்பிற்கு FAO நிறுவனத்தால் நிலக்கடலை உடைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

10 இலட்சம் ரூபா பெறுமதியான இவ் இயந்திரம் விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் தொழிற்துறையை மேம்படுத்தும் வகையில் மேற்படி நிறுவனத்தால் கமக்கார அமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (36)

# பொலிஸ் நிலையத்தில் தகராறு இரு பெண்களுக்கு அபராதம்

(கரணவாய்)

நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் தகராறில் ஈடுபட்ட இரு பெண்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

துன்னாலை பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த இரு பெண்களுக்கு எதிராக நெல்லியடிப் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர் இவ்வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறித்த இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து குறித்த இருவருக்கும் தலா 100 ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தார். (18)

# உரும்பிராய் அன்னங்கை வீதி; புனரமைக்குமாறு கோரிக்கை

(இருபாலை)


உரும்பிராய் அன்னங்கைச்சந்தியிலிருந்து மூன்று கோவில் ஊடாக மானிப்பாய் பிரதான வீதிக்குச் செல்லும் அன்னங்கை வீதி நீண்டகாலமாக திருத்தப்படாமல் உள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதியில் பல இடங்களில் குண்டும் குழிகளும் பெருமளவு காணப்படுவதாலும் தற்போது பெய்யும் மழைகாலத்தில் வெள்ளங்கள் குழிகளில் தேங்கி நிற்பதாலும் வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதைக்காண முடிகிறது.

இவ்வீதியால் பாடசாலைமாணவர்கள், விவசாயிகள் சுன்னாகம், மருதனாமடம் சந்தைக்கு செல்லும்விவசாயிகள், தமது விவசாயவிளை பொருட்களை சந்தைப்படுத்த செல்லும் ஒரு பிரதான வீதியாகும். இவ்வீதியை திருத்த சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (08)

# நெடுந்தீவில் முதியோர் இல்லங்கள் அமைவதற்கு இடமளியோம்

## நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் தெரிவிப்பு



முதியோர் இல்லங்கள் நெடுந்தீவில் அமைய எமது தசாப்தத்தில் இடமளிக்க மாட்டோம் எமது பசுந்தீவின் செல்வங்களான எம்தீவின் தாய்தந்தையினரை பேணிக்காக்காது முதியோர் இல்லங்கள் அமைத்து தங்கவிட இடமளிக்க மாட்டோம். இத்தீவில் பிறந்து என்றும் எம் நெடுந்தீவில் வசித்து வருகின்றவர்களில் நானும் ஒருவன் என்ற ரீதியில் இதை தெரிவிக்கின்றேன்என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் தீவக ஒருங்கிணைப்புக்குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

நேற்முன்தினம் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற சர்வதேச முதியோர் மற்றும் சிறுவர் தினத்தில் பிரதம விருந்தினராக கலந்த கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர். உரையாற்றுகையில் நல் அனுபவங்களினையும் சிறந்த பாதையினையும் எமது சமுதாயத்தினருக்கு விழிப்புடன் காட்டுபவர்களாக வயதில் மட்டும் முதுமையுடன் இல்லாமல் பல அனுபவங்களிலும் முதுமைபெற்று திகழ்பவர்கள் முதியோர்கள், சமுதாயம் நல்வழிப்படுவதற்கு இவர்களது வழிகாட்டலானது அனைவருக்கும் இன்றியமையாததாகவுள்ளது. கடந்த காலத்தில் எம்மையும் எம் சமுதாயத்தினையும் வளர்த்து விட்டபவர்கள் இவர்களே. இவர்கள் பேணிக்காக்கப்பட வேண்டியவர்கள் முதியோர் இல்லங்களில் ஒதுக்கப்பட வேண்டியவர்கள் அல்ல. சில சமுதாயத்தினரிடம் தமது சுகபோக வாழ்விற்காக பல இன்னல்கள் மத்தியில் தாம் பசியோடு இருந்தாலும் தன் பிள்ளை பசியோடு இருக்க இடமளிக்காது தம்மை கண்ணை இமை காப்பது போல் பேணிக்காத்து வளர்த்த பெற்றோர் பெருந்தகைகள் முதுமையெனும் வயதினை எட்டியதுடன் முதியோர் இல்லங்களில் தவிக்க விடுகின்றனர். இவ்வாறான இழிவான செயல்களிற்கு எம்தீவு மைந்தர்கள் வழிவகுக்க மாட்டார்கள் என தெரிவித்தார்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து முதியோர் கௌரவிப்பு, மாற்றுத்திறனுடைய முதியோருக்கான துவிச்சக்கரவண்டி வழங்கல், சிறுவர்களின் நிகழ்ச்சிகள் மற்றும் முன்பள்ளி 2015 பாடசாலை புதுமுக மாணவர்களிற்கான பாடசாலை உபகரணம் கையளிப்பு, புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்களிற்கான கையளிப்பு ஆகியவை இடம்பெற்றன.

பிரதேச செயலர் ஆழ்வார்பிள்ளை சிறீ தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச சபைத் தவிசாளர் அருளப்பு மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# கும்பல் ஒன்றின் தாக்குதல்; இளைஞர் படுகாயம்

வீதியால் சென்ற இளைஞரை இடைமறித்த கும்பல் ஒன்று சரமாரியாகத் தாக்கியதில் அவர் படுகாயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தாவளை இயற்றாலைப் பகுதியிலநேற்று இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் சண்முகலிங்கம் சீனிவாசன் (வயது-32) என்பவரே படுகாயடமைந்துள்ளார். குறித்த இளைஞர் நண்பர்களுடன் உபசார நிகழ்வென்றில் கலந்துகொண்டுவிட்டு வீடு திரும்பும்போதே தாக்கப்பட்டுள்ள்ளார் என்று தெறிவிக்கப்படுகிறது

## இலங்கையில்...

மேலும் 2009ஆம் ஆண்டு லாகூரில் வைத்து இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் சூத்திரதாரி எனவும் இவர் சந்தேகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மற்றையவரான அர்ஷத் மெஹ்மூத், பர்வேஸ் முஷாரப்பை 2003ஆம் ஆண்டு படுகொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டவர். அத்துடன் தீவிரவாத இயக்கம் ஒன்றுடன் தொடரபுபட்டவராவார்.

# வவுனியாவில் அடை மழை 234 குடும்பங்கள் பாதிப்பு

## இரு குளங்களும் உடைப்பெடுத்தன

வவுனியாவில் பெய்து வரும் மழை காரணமாக 234 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இரு குளங்களும் உடைப்பெடுத்துள்ளன என வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியாவில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக பல கிராமங்கள் பாதிப்படைந்துள்ளன். அந்த வகையில் பெரியமடு கிராமத்தில் 41 குடும்பங்களைச் சேர்ந்த 171 பேரும், நொச்சி மோட்டையில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 105 பேரும், பன்றிக்கெய்தகுளம் கிராமத்தில் 45 குடும்பங்களைச் சேர்ந்த 169 பேரும், மாணிக்கஇலுப்பைக்குளத்தில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 118 பேரும், பேயாடிகூழாங்குளத்தில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேரும், சாந்தசோலையில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 150 பேரும், பனிக்கநீராவியில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 134 பேரும் ஆக 234 குடும்பங்களைச் சேர்ந்த 899 பேர் பாதிப்படைந்துள்ளனர். பாவற்குளம் படிவம் இரண்டில் மழை வெள்ளம் காரணமாக 4 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் இடம்பெயர்ந்துள்ள நிலையில் பாடசாலை ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் மழை காரணமாக 14 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இதேவேளை சின்னரசன்குளம், புதியசின்னக்குளம் என்பன உடைப்பெடுத்துள்ளன. அதனைத் தடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. செட்டிகுளம் பகுதிக்கான போக்குவரத்தும் பாதிப்படைந்துள்ளதுடன் பாவற்குளம் நீர்மட்டமும் உயர்வடைந்துள்ளது.- எனத் தெரிவித்தார்.

## வட கிழக்கு...

மார்க்கமும் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதன் காரணமாக கொழும்பு நோக்கிப் பயணித்த இரவுநேர தபால் ரயில், பளுகஸ்வெவ ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எல்.ஏ.ஆர். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

## இரண்டு...

ரஜித் சிங், இரண்டு ஆழ்கடல்ரோந்துக் கப்பல்களுக்கு இலங்கையிடமிருந்து கொள்வனவுக்கட்டளை வந்துள்ளது.

இவை தற்போது கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டு வருகின்றன. இவை முற்றிலும் இந்தியத் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டவை.

வேறு எந்த நாட்டின் தொழில்நுட்ப உதவிகளோ கருவிகளோ இவற்றில் பயன்படுத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## காணாமற்..

றோர் மற்றும் உறவினர்கள் தேடி அலைந்து திரிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.இந்த நிலையில் நேற்றுமதியம் கட்டுடை திட்டி எனுமிடத்தில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (54)

## நிறைவேற்ற...

கின்றனர். உலகிலுள்ள சகல நாடு களிலும் இவற்றுக்கு வரி அற விட்டே அரசாங்கத்தை நடாத்துகின்றனர். இவர்கள் இதற்குரிய வரியை நீக்குவதாயின் அரசாங்கத்துக்கான வருமானம் எங்கிருந்து கிடைக்கப் போகின்றது எனவும் அமைச்சர் கேள்வி எழுப்பினார்.

## கொழும்புத்துறை..

தீவு அமைக்கப்படுவது, இந்தியப் பெருங்கடலின் கடல்வாழ் உயரினங்களுக்கு பெரும் ஆபத்தை விளைவிக்கும் என்று அந்த அமைப்பினால் எச்சரிக்கப்பட்டுள்ளது.

செயற்கைத் துறைமுகத்துக்காக பெருமளவு மண், கல் போடப்பட்டு நிரவப்படும் போது, கரையோரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்.

மில்லியன் கணக்கான தொன் பாறைகளும், ஏனைய சிதைவுகளும் கடலில் கொட்டப்படும் போது இயற்கையான பவளப்பாறைகளும், கடலடி அமைப்புகளும் சிதைந்து போகும் ஆபத்து உள்ளது.

இந்த திட்டத்தை ஆரம்பிக்க முன்னர் அரசாங்கம் முறையான சுற்றுச்சூழல் ஆய்வை மேறகொள்ளவில்லை என்று சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வுக்கான நிலையத்தைச் சேர்ந்த ரவீந்திர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இயற்கை வளங்களை அழிப்பதற்கு ஒரு அரசாங்கம் எவ்வாறு தீர்மானிக்க முடியும்?

வர்த்தகர்களால் கொடுக்கப்பட்ட அறிக்கையின் படி மீனவர்களின் வாழ்வாதாரத்தை எப்படி சிதைக்க முடியும்? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

டுபாய் பாம் சிற்றி திட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்பட்ட பாதிப்பை சுட்டிக்காட்டிய காரியவசம், இந்த திட்டத்தினால், பாணந்துறை தொடக்கம் நீர்கொழும்பு வரையான மேற்குக் கடலோரப் பகுதி பாதிக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.

இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை, 1.4 பில்லியன் டொலர் செலவில் சீனா மேற்கொள்ளவுள்ளது.

இதன் மூலம் எட்டு ஆண்டுகளில் கடலில் இருந்து 233 ஹெக்ரெயர் புதிய நிலப்பரப்பு உருவாக்கப்படும். இந்த திட்டத்துக்கு எதிராக நீர்கொழும்பு மீனவர்கள் இன்று போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அமைதிச்சூழல், அபிவிருத்தியைத் தொடர ஜனாதிபதி மகிந்தவிற்கு வாக்களியுங்கள்

## சாவகச்சேரியில் அமைச்சர் சுசில் தெரிவிப்பு





(யாழ்ப்பாணம்)

இன்றுள்ள அமைதிச் சூழலை பாதுகாப்பதற்கும் அபிவிருத்திகளைத் தொடர்வதற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு மக்கள் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டுமென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் அமைந்துள்ள தென்மராட்சி கலாசார மண்டபத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்த வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யுத்தத்திற்குப் பின்னராக இக்காலப்பகுதியில் யாழ்.மாவட்டம் அபிவித்தியில் பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டுள்ளது.

முக்கியமாக கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட ஒவ்வொரு துறைகளும் நவீனத்துவமுறையில் மேம்பாடு கண்டுள்ளன. அந்தவகையில் இன்றுள்ள அமைதிச் சூழலை பாதுகாப்பதற்கும் அபிவிருத்திகளை தொடர்வதற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவிற்கு மக்கள் வாக்களித்து அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல மில்லியன் ரூபா செலவு செய்துள்ளார்.

அந்த வகையில் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மட்டுமே யாழ்.மாவட்டம் மட்டுமன்றி வடமாகாண மக்களிடம் வாக்கு கேட்கும் உரிமை உள்ளதாகவும் சுட்டிக்காட்டிய அவர், மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் 20 இலட்சம் மேலதிக வாக்குகளால் வெற்றி பெறச் செய்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்த பங்களிப்பை வழங்க வேண்டு மெனக் கேட்டுக் கொண்டார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு தலைமையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தென் மராட்சி இணைப்பாளர் அலெக்ஸ் ஸான்டர் சாள்ஸ், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சாவகச்சேரி அமைப்பாளர் சர்வானந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

இதன்போது வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும், வடக்கு மாகாண சபை உறுப்பினருமான அங்கஜன் அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆதரவுக் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# கட்சித்தாவல்கள்

## ஜனாதிபதிக்கு ஆதரவு

(கொழும்பு)

லாகுகல பிரதேசசபையின் உப தலைவர் துஷான் ஜயசூரிய மற்றும் உறுப்பினர்களான ஜீ.தயாரத்ன மற்றும் ஜீ.விமலசேன ஆகியோர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்துள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக நேற்று அம்பாறைக்கு சென்றிருந்த போதே இது நிகழ்ந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்தரக் கூட்டமைப்புடன் இணைந்து கொண்டதை அடுத்து, லாகுகல பிரதேச சபையில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஏழில் இருந்து நான்காக குறைந்துள்ளது.

இதேபோல் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கில் இருந்து ஏழாக உயர்வடைந்துள்ளது.

## மைத்திரிக்கு ஆதரவு

பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவுக்கு மேலும் இரண்டு பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் இருவர் ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளனர்.

பொலன்னறுவை மெதிரிகிரிய மற்றும் லங்காபுர ஆகிய இரண்டு பிரதேச சபைகளின் உறுப்பினர்களே தாங்கள் இருவரும் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்கவிருப்பதாக அறிவித்துள்ளனர்.

மெதிரிகிரிய பிரதேச சபையின் உறுப்பினர் எச்.ஆர் நிமல் சந்திரரத்ன மற்றும் லங்காபுர பிரதேச சபையின் உறுப்பினர் முஸ்தபா நஸார்தீர் ஆகிய இருவருமே இவ்வாறு ஆதரவளித்துள்ளனர்.

# ஐ.தே.க.பிரசாரக்கூட்டம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்



பதுளை மாவட்டத்தில் உள்ள ஹப்புத்தளையில், நேற்று மாலை எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாக ஐ.தே.க. நடத்திய தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் மீது இனந்தெரியாதவர்கள் நடத்திய தாக்குதலில் ஐந்து பேர் காயமடைந்தனர்.

பரப்புரைக் கூட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும், ஊவா மாகாண எதிர்க்கட்சித் தலைவர் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் வருகை தருவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாகவே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்து ஆலய மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில், வைக்கப்பட்டிருந்த பதாதைகள் மற்றும் அலங்காரங்கள் இனந்தெரியாத குழுவொன்றினால் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் அங்கிருந்த ஐ.தே.க.வின் ஹப்புத்தளை அமைப்பாளர் சேனாரத் ஜெயசிங்க உள்ளிட்ட 5 பேர் தாக்கப்பட்டு காயமடைந்தனர் இவர்களில் இருவர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவின் வாகனத்தின் மீதும், தனது வாகனத்தின் மீதும் கற்கள் வீசித் தாக்கப்பட்டதாக, ஹரின் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஹப்புத்தளை நகரில் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்தின் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அநுராதபுர சிறைக்குள் புகுந்தது வெள்ளம்

## கைதிகள் இடமாற்றம்



மல்வத்து ஓயா பெருக்கெடுத்தமையினால் அருகிலுள்ள அநுராதபுர சிறைச்சாலைக்குள்ளும் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலைக்குள் இரண்டு அடி உயரத்துக்கு நீர் மட்டம் காணப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சிறைச்சாலையில் சுமார் 1000 கைதிகள் இருப்பதாகவும், தற்பொழுது இவர்கள் நீர்கொழும்பு, திருகோணமலை மற்றும் குளியாப்பிட்டி சிறைச்சாலைகளுக்கு அழைத்துச் செல்லப்படுவதாகவும் சிங்கள ஊடகமொன்று அறிவித்துள்ளது.

# யாழ்ப்பாணத்தில் பாரதிராஜா

தென்னிந்தியாவைச் சேர்ந்த திரைப்பட இயக்குநர் பாரதிராஜா யாழ்ப்பாணத்துக்கு நேற்று சனிக்கிழமை வருகைதந்தார். இவருக்கான வரவேற்பு நிகழ்வு யாழ்.நகரிலுள்ள ரில்கோ விடுதியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதரக பிரதித் தூதுவர் எஸ்.டி.மூர்த்தி, இலங்கை தமிழரசுக்கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# பிரசார பதாகைகளை அகற்றாத பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை

சட்டவிரோத தேர்தல் பிரசார சுவரொட்டிகள் மற்றும் பதாதைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காத பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோத சுவரொட்டிகள், பனர்கள் மற்றும் பதாகைகளை அகற்றும் நடவடிக்கை 95 வீதம் வெற்றியளித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் நிறைவு பெறும் வரையில் இந்த நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஒருசில பகுதிகளில் தொடர்நதும் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரப் பதாதைகள் மற்றும் சுவரொட்டிகள் காணப்படுவதாக முறைப்பாடு கிடைத்துள்ளதென அவர் கூறியுள்ளார்.

அவற்றை அகற்றுவதற்கு தவறும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளுடன் ஜோன் அமரதுங்க முக்கிய பேச்சு



(கொழும்பு)

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் குழுவொன்றுடன் எதிர்க்கட்சித் தலைவரின் செயலகத்தில், ஐ.தே.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜோன் அமரதுங்க நேற்றுக் காலை பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

வரும் 8ஆம் திகதி நடக்கவுள்ள ஜனாதிபதி தேர்தலின் போது, எதிரணியின் ஆதரவாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் ஓய்வுபெற்ற இரண்டு மேஜர் ஜெனரல்கள், மற்றும் பிரிகேடியர், கேணல் நிலையில் பணியாற்றிய அதிகாரிகள் குழுவொன்றும் பங்கேற்றுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நாளன்று, கட்சி ஆதரவாளர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர்

எதிரணியின் ஆதரவாளர்கள், ஆளும்கட்சியினரின் தாக்குதலுக்கு உள்ளாகி வரும் நிலையிலேயே இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் ஜோன் அமரதுங்க, உள்நாட்டு விவகார அமைச்சராகவும், பதில பாதுகாப்பு அமைச்சராகவும் பதவிகளை வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.